


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை.**

**பொருள் :** செல்வங்களுள் சிறப்புடைய செல்வமாவது கேள்விச் செல்வம்; அக்கேள்விச் செல்வம் எல்லாச் செல்வங்களுள் ளும் முதன்மையானது. (411)

**செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.**

**பொருள் :** காதுகளுக்கு அறிவுரைகளாகிய கேள்வி இல்லாதவிடத்து வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும். (உயிர் நிலை பெறுவதற்கு எப்பொழுதும் உணவு எவ்வளவு இன்றியமை யாததோ அப்படியே அறிவு நிலைபெறுவதற்குக் கேள்வி அறிவும் இன்றியமையாதது.) (412)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*



### ஆநந்த நடனம் ஆடினான்

***பல்லவி***

ஆநந்த நடனம் ஆடினான்
அல்லும் பகலும்நல்லூர் வீதியிற் செல்லப்பன்

***அநுபல்லவி***

மோனந் திகழுஞ்சிவ யோகியர்தா மறியார்
முழுவது முண்மையென முகமலர்ந் தோதுவான் (ஆநந்த)

***சரணங்கள்***

ஈனந் தரும்பிறவி யெடுத்தெடுத் துழலாமல்
என்னைவந் தாண்டு கொண்டான் இன்பத்தில் மாண்டு கொண்டேன்
தானந் தவமிரண்டுஞ் சரியை கிரியைவிண்டும்
சதுர்வித வுபாயத்தாலே தானாக வென்னைச்செய்தான்
(ஆநந்த) 01

முன்னிலை யில்லையென்றும் முழுவது முண்மையென்றும்
மூடிய மாயவிருள் ஓட வருள்புரிந்தான்
அந்நிலையி லேயுட லாவியவன் வசமாச்சு
ஆகா அதையறிவார் ஆர்தானிவ் வையகத்தில் (ஆநந்த) 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 328

2025 சித்திரை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கடவுள் நம்பிக்கை... | பு. கதிரித்தம்பி | 01 – 03 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 04 – 05 |
| காலம் எனக்கொரு பாட்டை... | மு. செல்லத்தம்பி | 06 – 08 |
| திருக்கயிலாயம் | வி. செல்வரெத்தினம் | 09 – 13 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 14 – 15 |
| திருவெண்காட்டில் தேனாகியது... | கே.எஸ். சிவஞானராஜா | 16 – 17 |
| திருவடிப் பெருமை | செ. பாலச்சந்திரன் | 18 – 19 |
| இறை சிந்தனை... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 20 – 21 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 22 – 25 |
| விழுமியங்களைப் பின்பற்றாத... | சி. நற்குணலிங்கம் | 26 – 28 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 29 – 32 |
| திருப்புகழைக் கற்றார்... | துரை. கணேசமூர்த்தி | 33 – 35 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 36 – 41 |
| அன்பு | இணையம் | 42 – 44 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)
சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை
தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406
அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai,
Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# பங்குனி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டுவரும் ஞானச்சுடர் மலரின் பங்குனி மாத மலருக்கான வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபர் திரு வ. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் ஒவ்வொரு வருடமும் பங்குனி மாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை நிகழ்த்தி வருகின்றேன். 27 வருடங்களுக்கு மேலாக இந்த ஞானச்சுடர் வெளியீடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இது ஒரு பெரிய சாதனை. இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் ஆன்மீக சஞ்சிகைகள் தொடர்ச்சியாக நீண்டகாலத்திற்கு வெளிவருவது என்பது அரிது. ஆனால் இந்த ஞானச்சுடர் நீண்டகாலமாக வெளிவந்து கொண்டிருப்பது என்பது மிகப் பெரும் சாதனையாகும். இதற்குக் காரணமாக உள்ள சந்நிதியான் ஆச்சிரம தலைவர் மற்றும் பேரவையினர்க்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஞானச்சுடர் சஞ்சிகையில் வருகின்ற விடயங்கள் சிலவற்றை நான் வாசிக்கின்ற போது சமயங்கள் பற்றிய ஐயங்களை தீர்க்கக்கூடியவாறான கட்டுரைகளையே நான் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இச் சஞ்சிகையானது இந்தக் காலகட்டத்தில் மிக முக்கியமானதாகும். ஏனெனில் உயர்தர மாணவர்களுக்கும் இச் சஞ்சிகை வழிகாட்டியாக அமைகின்றது. ஈழ மக்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி இன்றைய மதமாற்றமானது உச்சக்கட்டத்தில் நடைபெறுகின்றபோது சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணி மிகப்பெரியது. எந்தெந்த துறைகளில் மக்களுக்கான உதவிகள் தேவைப்படுகின்றதோ அந்தத் துறைகளுக்கு நேரடியாகச் சென்று உதவிகளை மேற்கொண்டு வருவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. இதனால் மதமாற்றம் செய்பவர்களுக்கு இது ஒரு பேரிடியாகும்.

அதாவது கல்விப்பணி, அன்னதானப்பணி, வாழ்வாதாரப்பணி, பாடசாலைகளுக்கான உதவிகள், ஆலயங்களை திருத்தியமைக்கின்ற பணி அத்துடன் மருத்துவப்பணி போன்ற அறப்பணிகளைத் தேடிச் செய்கின்றார்கள். மனிதனுக்கு என்ன என்ன தேவையோ அதை இனங்கண்டு அதற்கேற்றாற்போல் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் பணிகளை முன்னெடுக்கின்றார்.

ஞானச்சுடர் பத்திரிகையானது இந்தக் காலகட்டத்தில் மிகவும் முக்கியமானது ஆகும். சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளை முன்னுதாரணமாகக் கொண்டு நீங்களும் இந்தப் பணிகளைச் செய்யவேண்டும். அதனூடாக மக்களுக்கு நன்மைகள் கிடைக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறி இந்த வெளியீட்டுரை ஆற்றுவதற்கு சந்தர்ப்பத்தை தந்த சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கும், பேரவையினருக்கும் நன்றிகூறி தனது வெளியீட்டுரையினை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)

**நா. குகன்**
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

**பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)

**இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திருமதி ஸ்ரீனிவாசன்**
(பழம்றோட், கந்தர்மடம்)

**Dr R. பாக்கியநாதன்**
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)

**திருமதி T. ராமச்சந்திரன்**
(யாழ்ப்பாணம்)

**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)

**செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்**
(யாழ்ப்பாணம்)

**வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**ச. மனோகரி**
(சுண்ணாகம்)

**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)

**செ. மகேஸ்வரன்**
(கோப்பாய் வடக்கு)

**க. அச்சுதன்**
(தெல்லிப்பழை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழில்மதி ஜெயானந்தன்**
(அச்சுவேலி)

**ந. இந்திரகுமார்**
(அச்சுவேலி)

**சு. பாலச்சந்திரன்**
(மருதனார்மடம், இணுவில்)

**சு. வித்தியா**
(புத்தூர்)

**த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)

**க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)

**வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)

**க.கு. கிருபாகரராசா**
(பிரதானவீதி, ஆவரங்கால்)

**இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)

**சி. நந்தகுமார்**
(வங்கி முகாமையாளர், நெல்லியடி)

**சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)

**வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)

**சி. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)

**தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**T. இரவீந்திரதாஸ்**
(சாமியன் அரசடி, கரவெட்டி)

**அ. லோகநாதன்**
(மல்லாகம்)

**உரிமையாளர்**
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. ஞானச்சந்திரன்**
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
**க. ஐங்கரன்**
(புலோலி)
**இ. ஸ்ரீஸ்கந்தராம்**
(உப தபாலதிபர், உரும்பராய்)
**K. இராமச்சந்திரன்**
(சங்கானை)
**த. இராஜசிங்கம்**
(நீர்வேலி)
**ம. புலேந்திரன்**
(கரணவாய், கரவெட்டி)
**கி. தவராசா**
(காந்தியூர், புலோலி)
**ஐ. சத்தியபாலன்**
(பலாலி வீதி, உரும்பராய்)
**க. இராஜேஸ்வரி**
(சுண்ணாகம்)
**செ. ஸ்ரீனிவாசன்**
(அல்வாய்)
**ஜெயகாந் மாதுமை**
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
**சுப்பிரமணியம் சுரேஸ்குமார்**
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
**க. கணேசதேவா**
(மாதகல்)
**அதிபர்**
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
**வி. செல்வரெத்தினம் J.P**
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
**ஐ. குகேந்திரராணி**
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
**செ. மயூரன்**
(புன்னாலைக்கட்டுவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம. கந்தையா**

(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)

**க. மகேந்திரன்**

(சங்கத்தானை, சாவகச்சேரி)

**தங்கராசா கலாஜோதி**

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

**செல்வி பாலாம்பிகை கந்தசாமி**

(கட்டைவேலி, கரவெட்டி)

**S. தங்கேஸ்வராசா**

(காட்டுப்புலம்)

**திருமதி பொ. மணிமேகலை**

(குப்பிளான்)

**எஸ்.ரி. குமரன்**

(மல்லாகம்)

**பொ. காசிலிங்கம்**

(கொக்குவில்)

**கா. செல்லத்துரை**

(உடுவில், சுண்ணாகம்)

**வீ. புஸ்பநாதன்**

(உரும்பராய் வடக்கு)

**சந்திரசேகரம் மகிந்தன்**

(சிறுப்பிட்டி மேற்கு)

**தர்சினி பகீரதன்**

(உப தபாலதிபர், நீர்வேலி)

**கு. குணரூபன்**

(மீசாலை கிழக்கு)

**வ. ஆறுமுகம்**

(இளை. அதிபர், ஆவரங்கால்)

**கி. வரதராசன்**

(அச்சுவேலி தெற்கு)

**அ. சந்திரகுமாரன்**

(சந்திரகோட்டம், சுழிபுரம்)

**வி. நாகம்மா**

(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)

**சர்மிளா இராசலிங்கம்**

(கோப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீட்டுரை:-**

பங்குனி மாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை சைவப்புலவரும் ஆசிரியருமான திரு நி. பாபுதரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் பங்குனி மாதத்திற்குரிய ஞானச்சுடர் மலரின் மதிப்பீட்டு ரையை ஆற்றுவதில் நான் பெருமைப்படுகின்றேன். இந்த நூலானது அறிவு சார்ந்த நூல். அதாவது அறிவு இலக்கியமாக போற்றப்படவேண்டிய ஓர் தார்ப்பரியம் இந்த நூலுக்கு இருக்கின்றது. 27 வருடங்கள் தாண்டி தொடர்ந்தும் இந்நூல் பரிணமிக்கின்றது என்பது சிறப்பான ஒரு விடயமாகும். உளவியல் ரீதியாக சொல்வதானால் ஓர் ஆய்வு சொல்கின்றது, ஒரு நிறுவனமானது குறிப்பிட்ட இருபது அல்லது இருபத்தைந்து வருடங்களுக்கு பிறகு அது செயலற்றுப் போகலாம். அடுத்த சந்ததிக்கு செல்லாமல் விடலாம். அதற்காகத்தான் ஒரு நிறுவனம் தனது இலக்கை 20 வருடங்களுக்குள் அடைந்துவிடவேண்டும் என கூறுவார்கள். இல்லாதுவிடில் அது அழிந்து போய்விடும். அல்லது இலக்கை அடையாது போய்விடும் என்பார்கள்.

ஆனால் 25 வருடங்களைத் தாண்டி இந்த ஞானச்சுடர் வெளிவந்து கொண்டிருப்பதுடன் எல்லாருடைய கைகளிலும் இன்னும் இன்னும் வாசகர்களை கவர்ந்து கொண்டிருக்கின்றது என்று சொன்னால் இந்த மலரானது அடுத்த சந்ததியை நோக்கி வளர்ந்துவிட்டது என்பது பொருள். ஒரு சந்ததியில் உருவாக்கம் அடைந்து மாற்று சந்ததியும் இதை வரவேற்கிறது என்றால் இந்த நூலினுடைய மதிப்பீடு உச்ச அளவிற்கு சென்றுள்ளது என்பது உண்மை.

மயில்வாகன சுவாமிகளது திருவுருவப்படமும் இதை வெளியீடு செய்கின்ற சைவ கலை பண்பாட்டுப் பேரவை, முருகப்பெருமானது திருவுருவப்படம், பூவரசு மரத்தடியில் இருக்கின்ற விக்கிரக சிறப்பு எல்லாம் சேர்ந்த குருவருளாக இந்த முன் அட்டை எடுத்தியம்புகின்றது. 327ஆவது மலர் மூன்றாவது தசாப்தத்தை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது. அட்டையின் உட்பக்கத்தில் வழமைபோன்று திருவள்ளுவரதும் யோகர்சுவாமிகளது சிந்தனையோடு ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்த நூலினுடைய வளர்ச்சி மிகப்பெரியது. நான் சிறுவனாக இருக்கின்றபோது ஞானச்சுடர் மலர் எப்படி இருந்தது. இன்றைக்கு எப்படி வளர்ச்சியடைந்திருக்கின்றது என்றால் அது சந்நிதி வேற்பெருமானது திருவருளும் அதற்குப் பின் இணைப்பாக இருந்து வழிநடாத்துகின்ற அத்தனை நல் உள்ளங்களுக்கும் அதன் பெருமை இருக் கின்றது. அத்தோடு இந்த ஞானச்சுடர் நூல் ஓர் வரலாற்றுப் பொக்கிசம். அதாவது 03 பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுசெய்வதற்கு நான் இங்கே தொடர்புபடுத்தி விட்டிருந்தேன். அவற்றுள் இரண்டு பேர் ஆய்வுசெய்து பட்டமும் பெற்றிருந்தார்கள்.

ஆகவே இந்த நூலுக்கு பெருமை சேர்க்கின்ற வகையிலே கட்டுரையாளர்களும், அதை நெறிப்படுத்துகிறவர்களும் நிறைவாக தமது கருத்தை ஆற்றுகின்றார்கள். எனவே குருவருள் திருவருளோடு ஞானச்சுடர் என்ற 327 ஆவது மலர் பிரசவிக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சாதாரணமான விடயம் அல்ல என்று கூறி மலரில் இடம்பெற்றிருந்த ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியவர்களுக்கு விளக்கிக்கூறி தனது மதிப்பீட்டுரையினை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனித வாழ்வு மகத்துவமானது. தெய்வீகமானது. தனித்துவமானது. தன்னிகரில்லா இறைவன் நாம் செய்த பூர்வ புண்ணிய பலன் காரணமாக இந்த மனித வாழ்வினைத் தந்துள்ளான். அதனூடாக நாம் செம்மையாக வாழ வேண்டுமானால் இப் பிறவியை தந்த இறைவனை இரவு பகல் பாராது எம் நெஞ்சில் நிலைநிறுத்தி அவனை வணங்கித் துதிக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே சமய வாழ்வை மேம்படுத்துவதற்காக நான்கு தேவார முதலிகளை எமக்கு முன் அவதரிக்கச் செய்து அவர்களது அருளாசிகளுடன் கூடிய ஆன்மீக பலத்தை எமக்குத் தந்தருளும் முகமாக பல ஆலயங்களை பாத யாத்திரைமூலம் பலவித அடியார்களையும் இணைத்து இறை வழிபாட்டை மேம்பாடடையச் செய்தனர். அதனூடாக மக்களுக்கு ஏற்பட்ட பலவித இடர்களைக் களைந்து வாழ்வை நிலைபெறச் செய்தனர் அருளாளர்கள்.

அதன் அடிப்படையில் இக்காலத்தில்கூட பல அடியார்கள் பல இடங்களுக்கும் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற பேரவாவுடன் யாத்திரை எனும் முனைப்புடன் செயலாற்றி வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக கதிர்காம உற்சவத்தையொட்டி செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து இன மத பேதமின்றி பலவித அடியார்கள் ஒன்றுகூடி பாத யாத்திரையாகப் புறப்படுவது நீண்டகாலமாக வழங்கிவரும் ஒரு மரபாகவே பேணப்படுகின்றது.

சுமாராக 45 நாட்கள் வெயில், மழை பாராது பலவித இடர்பாடுகளின் மத்தியில் நடை பவனியாக ஊர் ஊராகச் சென்று கதிர்காமத்தில் அவர்களது யாத்திரையினை நிறைவு செய்வர். அவ்வகையில் இவ்வருடம் யூன் 26இல் ஆரம்பமாகின்ற கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு வழமைபோன்று 01.05.2025அன்று செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து பாத யாத்திரையானது ஆரம்பமாக இருக்கின்றது.


செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து எடுத்துவரப்படும் வேலானது சந்நிதியான் ஆச்சிரமத்து பூசை அறையில் வைக்கப்பட்டு ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட பூசை வழிபாட்டைத் தொடர்ந்து யாத்திரைக் குழுவினருக்கான காலை உணவு வழங்கப்பட்டு பயணச் செலவுக்காக ஒரு தொகை நிதியும் வழங்கப்பட்டு ஆச்சிரம சுவாமிகளால் ஆசீர்வதிக்கப்பட்டு ஆச்சிரம வாசல்வரை சென்று வழி அனுப்பி வைப்பார்.

இதன் அடிப்படையில் கதிர்காம யாத்திரையின் புனிதம் நீண்டகாலமாக பேணப்பட்டு வருவதனை நாம் காணக்கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரைப்போல் யாருளார்!

கடந்த 01.05.2025 வியாழக்கிழமை அன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் சிவ சாயுச்சியம் அடைந்தார்.



அவர் வாழ்ந்த காலங்களில் எமது ஆச்சிரமத்து நிகழ்வுகளுக்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருந்து எம்மோடு பயணித்தவர் என்று சொன்னால் மிகையாகாது.

1980ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமி அவர்களால் நடாத்தப்பட்டு வந்த ஆனந்தா ஆச்சிரமத்தில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய தேர் உற்சவத்தன்று இரவு ஆனந்தா ஆச்சிரமத்தில் இடம்பெறும் அபிடேக நிகழ்வில் தனது பஜனைக் குழுவினரோடு வந்து இணைந்துகொண்டவர்தான் நல்லை ஆதீன 2ஆவது குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக 1985ஆம் ஆண்டு தொடக்கம் 1988ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆலயத்தில் இடம் பெற்ற பூசை வழிபாடுகள் தடைப்பட்டு பின்பு 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளும் அரசம்மா மடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

1991ஆம் ஆண்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையை ஆரம்பித்த காலத்தில் நல்லைக் குரு மணியின் ஆலோசனைகளையும் பெற்றதோடு பேரவையின் போசகராகவும் விளங்கினார். இதன் அடிப்படையில் எமக்கும் குரு முதல்வருக்கும் உள்ள தொடர்பானது மிகவும் அன்னியோன்னியமானதாகவும், அன்பாகவும் மிளிர்ந்து வந்தது.



1995ஆம் ஆண்டு சந்நிதியான் ஆச்சிரமம் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் இடத்தில் புதிய கட்டுமானப் பணியை ஆரம்பித்த நேரத்தில் அடிக்கல்லை நட்டு அதன் திறப்பு விழாவுக்கும் தவத்திரு முருகேசு சுவாமிகள் அவர்களோடு இணைந்து ஆச்சிரமத்தின் செயற்பாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து வைத்தவர். பேரவையினால் பிரதி வெள்ளிதோறும் நடைபெற்றுவந்த வாராந்த நிகழ்வுகளில் பங்குபற்றுவதோடு ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த விழாக் களுக்கும் தலைமை தாங்கி நடாத்துவதோடு அவ் விழாவினையும் சிறப்பித்து பேரவையின் வளர்ச்சிக்கு ஒரு ஊன்றுகோலாக இருந்தவர்.







1998ஆம் ஆண்டு தொடக்கம் எமது பேரவை வெளியீடான ஞானச்சுடர் மலரின் வளர்ச்சிக்கு போசகர் என்ற காரணத் தால் தனது முழுமையான பங்களிப்பையும் வழங்கியதோடு ஆச்சிரமத்தில் இடம்பெறும் சகல நிகழ்வுகளுக்கும் வருகை புரிந்து நிகழ்வுகளைச் சிறப்பித்தார்.

அதேபோன்று வைகாசி பெருவிழாவின்போது சான்றோரை இனங்கண்டு கௌரவிக்கும் நிகழ்விலும் முன்னின்று செயற் பட்டவர். ஆச்சிரம சுவாமிகள் மலையகம், கதிர்காமம் போன்ற பிரதேசங்களுக்கு சமுதாயப் பணிகளின் நிமித்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும்போதுகூட தானும் வருகிறேன் என்று சொல்லி ஆச்சிரம சமுதாயப் பணிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டவர்.




ஆதீன சுவாமி அவர்கள் உடல் தளர்ந்த நிலையிலும் மாதம் ஒரு தடவை மாலை நேரங்களில் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வருகைபுரிந்து தனக்குள்ள இடர்பாடுகளையும் மனச்சஞ்சலங்களையும் ஆச்சிரம சுவாமி அவர்களோடு உரையாடி தனது மனதை ஆற்றுப்படுத்திக்கொண்டு செல்பவர்.

ஆதீன குரு முதல்வர் என்ற நிலையில் இருந்து இறங்கி சந்நிதியான் ஆச்சிரமத்தின் உறவினர்போன்று எம் எல்லோரோடும் இயல்பாகப் பழகியதோடு, தான் ஆதீன முதல்வர் என்ற எண்ணத்தை எம்மோடு பழகுங் காலங்களில் காணமுடியாது. இயல்பாகவே உற்ற நண்பனைப்போல் எம்மோடு இணைந்து சுக துக்கங்களில் பங்குபற்றும் ஒரு பெருந்தகையாவார்.

அவரது இறுதிக்கால நினைவானது எம்மால் இன்றும் ஜீரணிக்கமுடியாதுள்ளது. இவரைப் போன்ற ஆதீன குரு முதல்வர் ஒருவரை எக்காலத்திலும் காணமுடியாது என்பது அனைவரும் அறிந்த உண்மை. அவர் ஆதீன குரு முதல்வராக இருந்த 44 வருட காலத்திலும் சமய வாழ்வுக்கென தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்து வாழ்ந்த ஒரு ஆன்மீகவாதி என்றே சொல்லலாம்.

சுவாமி அவர்களின் ஆத்மா ஆண்டவனின் பாதாரவிந்தங்களில் நிரந்தரமாக இளைப்பாற எல்லாம் வல்ல சந்நிதி வேற்பெருமானை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் நம்பிக்கை மனிதனுக்கு மிக அவசியம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

கலியுக காலத்தில் விஞ்ஞானம் அதி உச்ச நிலையை அடைந்து விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளால் பூமியைவிட எத்தனையோ கோள்கள் இருக்கின்றதென்று கண்டுபிடித்து உள்ளார்கள். சந்திரன் செவ்வாயில் காலடி வைத்த விஞ்ஞானிகள் அங்கு மக்கள் சென்று வாழ முடியுமா? என்பதை ஆராய்கிறார்கள். இன்னும் சிறிது காலத்தில் பூமி அழியுமென்று அச்சம் தெரிவிக்கின்றார்கள். ஆனால் கடவுள் இருக்கிறதை பூரணமாக நம்பி, தமது ஆய்வுகூடங்களில் நடராஜரை வைத்து வழிபடுவதாக அறிகின்றோம். இதை வைத்திய நிபுணர்கள் நம்பி, குணமடையா நோயாளிக்கு இறைவனை வேண்டும்படி கூறுவதை நாம் அறிவோம். இப்பொழுது கல்வியில்லா ஒரு சிலரும் மிருகவதை செய்து வாழ்கின்ற ஒரு சிலரும் இறை நம்பிக்கையில்லாதிருக்கின்றனர். இவர்களும் கோயில் சென்று வழிபட்டுவந்தால் இறையருளால் நம்பிக்கை ஏற்படும் என்பது திண்ணம்.

இறைவன் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரையும் இறைவன்மேல் அன்பு வைத்தால் அவர்களையும் ஆட்கொள்வாரென்பதை பின்வரும் பா மூலம் அப்பர் அருளுகின்றார்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டும் தந்து
தரணியொடு வானாத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க்கே காந்தரல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

என அருளுகின்றார். இறைவனில் பற்று இருந்தால் அவர் ஆட்கொள்வாரென பாடல்மூலம் அறியத்தருகின்றார்.

சிவன் ஒருவன் அவனுக்குமேல் இன்னொரு கடவுள் இல்லையெனப்பட்டதால் பின்வரும் பாடல்மூலம் அறியத்தருகின்றார்.

வில்லால் அடிக்கச் செருப் பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்க களிவண்டு கூர்ந்து
அல்லார் பொழில் தில்லை அம்பலவாணர்க்கு ஓர் அன்னை பிதா
இல்லாததால் அல்லவோ இறைவா கச்சி ஏகம்பனே.

*மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய கடலுக்கு ஒப்பானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை பிதா இருந்தால் தடுத்திருப்பார்கள். எனவே கடவுள் ஒருவன்.

மானுடராகிய நாம் இறைவனை அடைய பிறவியாகிய கடலைக் கடக்க வேண்டுமென திருவருட்பயன் நூலாசிரியர் கூறுகின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்.

இறைவனடி சேர்ந்தவர் பிறவிக் கடலை நீந்திக் கடப்பார். சேராதவர் நீந்திக் கடக்க மாட்டார் என்பது பொருள்.

தூல உடம்புடன் இறைவனடி சேர்ந்தவர்கள் மாணிக்கவாசகர், நந்தனார் ஆகிய இருவர். இறையருள் உள்ளவர்கள் கூடுவிட்டுக் கூடு பாயும் தகைமையுடையவர்கள். அருணகிரி அரசனது தேவைக்கு பூப்பறிக்க தனது உடலை உச்சிமலையில் வைத்துவிட்டு இறந்து கிடந்த கிளியில் உயிரைச் செலுத்தி பறந்துசென்று பூப்பறித்து வந்தார். ஆனால் அவர் உடலை அரசன் மக்கள் சொல்கேட்டு எரித்துவிட்டான். அருணகிரி கிளியாக இருந்து கந்தரலங்காரம், கந்தரனுபூதி பாடினாரெனக் கூறப்படுகின்றது.

கலியுகத்தில் கலியுகவரதனாகக் கந்தன் விளங்குகின்றான். யாழ் குடாநாட்டின் நல்லூர்க்கந்தன் இருந்து ஆட்கொண்ட அடியவர்கள், சித்தர்கள், செல்லப்பாசுவாமி, யோகர்சாமி என்பவர்கள். நல்லூரானின் அருள்கண்டு பிற சமயத்தவர்களும் நாடொறும் வணங்கிச் செல்கின்றனர். இதுபோல் மாவிட்டபுரம் முருகன் மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் நீக்கி மனித முகம்பெற அருள்புரிந்தார்.

தொண்டைமானாறு சந்நிதியான், நல்லூர்க் கந்தன் ஆலயம்போல் கோபுரமில்லாத ஆலயம். அதுமட்டுமன்றி மந்திரம் சொல்லிப் பூசை செய்யாத ஆலயம். இன்னும் இவ்வால யத்தை எந்நேரமும் சென்று வழிபடலாம். செல்வச்சந்நிதியானை மந்திரம் சொல்லிப் பூசை செய்யாவிட்டாலும் அடியவர்கள் நினைக்கின்றதை அறிந்து அருள் கொடுக்கின்றார். இறைவன் எல்லாம் அறிபவர் என்று ஆறுமுகநாவலர் கூறியது இறையருளாகும். செல்வச்சந்நிதியான் ஆலயத்தில் பூசகர்கள் உச்சியில் இடும் விபூதியைப்பெற பூசை முடிந்ததும் மிக ஆவலாக அடியவர்கள் நிற்பார்கள். இன்னொரு பக்கம் சந்நிதியான் ஆலயத்தில் ஆலமிலையில் படைத்த அமுதுபெற முண்டியடித்துக்கொண்டு நிற்பார்கள். சந்நிதியான் அருள்பெற்று நோய் நீங்கப்பட்டவர்கள் எத்தனைபேர். சந்நிதியானுக்கு தொண்டு செய்ய வேண்டுமென்ற விருப்பத்துடன் வீதியை அளவிடுகின்ற அடியவர்களை காணக்கூடியதாக இருக்கின்றது. நோய் நீக்கப்பட்ட அடியவர்கள் தினமும் கோயில் வந்து வணங்கிச் செல்லுகின்றார்கள்.

அன்னக்கந்தன் என்பதை அறிய மோகன சுவாமிகளை தன்வயப்படுத்தி அன்னம் வழங்க வைத்துள்ளார். அதுமட்டுமன்றி இடர்நேரும் இடங்களுக்குச் சென்று உதவிசெய்ய வழிகாட்டியுள்ளார். சாதி, மதபேதமின்றி எல்லாமக்களுக்கும் உதவி செய்கின்றார். இறைவன் படைத்த உயிர்கள் துன்பமடையக்கூடாதென எண்ணி, பொருளுதவி, பணவுதவி, துவிச்சக்கர வண்டி என்பவைகள் வேண்டியவர்களுக்கு அளித்து வருகின்றார். மருத்துவ சேவை செய்து வருகின்றார். முருகன் பணம், பொருள் தருகிறான். நான் என்ன செய்கிறேன். என்னால்

*படித்தல் என்பது ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கான அடிப்படைக் கருவியாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் நடக்கவில்லை. எல்லாம் அவன் செயல் என்பார். வற்றாத ஊற்றுப்போல் அவரது சேவை நீண்டுகொண்டிருக்கின்றது. சந்நிதியான் ஆச்சிரமத்தில் அமுது உண்ண வருபவர்கள் மோகனதாஸ் சுவாமிகளின் தொண்டை வாயார வாழ்த்துகின்றார்கள். கடவுள் நம்பிக்கையை ஊட்டக்கூடிய தலமாக செல்வச்சந்நிதியான் விளங்குகின்றான். நிம்மதியைக் கொடுக்கின்றான். நோயற்ற வாழ்வுடையவனாக மனிதன் வாழ வழிகாட்டுகின்றான். எனவே அடியவர்கள் தினமும் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று வழிபட்டு வாருங்கள். சிறப்பாக வாழ்வீர்கள். கடவுள் நம்பிக்கை வீண்போகாது என்பது உறுதி.

## சித்திரையே வருக! சிறப்புகள் தருக!

*சித்திரையே வருக!*
*சிறப்புகள் தருக!*
*இத்தரை வாழ்வில்*
*இன்பங்கள் பெருக!*
*(சித்திரையே)*

*விசுவாவசு வருடத்தில்*
*விரோதங்கள் நீங்க!*
*குவலயத்தில் எங்கும்*
*அமைதி பொங்க!*
*(சித்திரையே)*

*அன்பால் அனைவரும்*
*ஒன்றாய் இணைந்திட!*
*துன்பங்கள் துயரங்கள்*
*தொலைந்தே போயிட!*
*(சித்திரையே)*

*தானமும் தவமும்*
*தளைத்தே ஓங்கிட!*
*தன்னலம், பகைமை*
*மனங்களில் ஒழிந்திட!*
*(சித்திரையே)*

*வானம் பொய்யாது*
*இனிதே பொழிந்திட!*
*வளங்கள் பெருகிட*
*வாழ்வு செழித்திட!*
*(சித்திரையே)*

*பொய், கொலை*
*களவுகள் ஓய்ந்திட*
*தெய்வீக மணம்*
*எங்கும் கமழ்ந்திட!*
*(சித்திரையே)*

*-கி. குலசேகரன்-*

*வாழ்வில் இயல்பாக நான், எனது என்ற முனைப்புக்கள் அற்று வாழ்தலே துறவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 15

(தொடர்ச்சி...

## குறிக்கோளும் அதனை அடையும் வழியும்

- திரு பூ. சோதிநாதன் அவர்கள் -

### 16) முக்குணங்கள்

பிரகிருதி என்பது சத்துவம், ராஜசம், தாமசம் என்ற மூன்று குணங்களை அடக்கிய ஒரு பொருளாகும். கீதையின் பதினான்காவது அத்தியாயம் முழுவதும் இந்த முக்குணங்களின் தன்மையையே ஆராய்கிறது. அம் முக்குணங்களை உடைய பிரகிருதியே செயலுக்கான ஷேத்திரமாகும்.

சத்துவத்தின் பண்புகள் தூய சமநிலை, இசைவு, ஒளி என்பனவாகும். பரபரப்பு, செயற்பாடு, சக்திவிரயம், பிரிப்பு என்பன ராஜசத்தின் பண்புகளாகும். சோம்பல், முடக்கம், தேக்கம், நித்திரை முதலானவை தாமசத்தின் பண்புகளாகும். இம் மூன்று குணங்களும் ஏதோ ஓர் அளவில் உள்ளவனே ஒரு தனிமனிதனாவான். எந்த ஒரு வேளையிலும் நாம் அவற்றினின்றும் விடுபட்டவர்கள் அல்லர். ஒரு சில நேரங்களில் அவற்றுள் ஒன்று மேலோங்கி இருக்கும். வேறொரு வேளை மற்றொன்று மிகுந்திருக்கும். நாம் எமது வாழ்வில் பலவிதமான மனநிலைகளை மாறி மாறி அடைகிறோம். சில வேளைகளில் நாம் உற்சாகம் இழந்தும், துன்புற்றும் இருக்கின்றோம். வேறு சிலவேளைகளில் செயற்பட்டுக்கொண்டும், உற்சாகமாக ஓடி ஆடிக்கொண்டும் இருக்கின்றோம். இன்னும் சிலவேளைகளில் எமது மனநிலை மிக உயர்வானதாகவும், தெளிவானதாகவும் இருக்கின்றது. எனினும் ஒருநாள் முழுவதும் ஒரே மனநிலையில் நாம் இருப்பதில்லை. பிரகிருதியின் குணங்கள் எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்காமல் வண்டிச் சக்கரத்தின் ஆரங்கள்போல மேலும் கீழும் மாறி மாறி வந்து போகின்றன.

### 17) குணங்களும் பிரபஞ்சமும்

குணங்கள் பிரபஞ்சத்தின் வளர்ச்சிமுறையோடு இயைந்து செல்கின்றன. அத்துடன் இந்த வளர்ச்சி முறையோடு பரந்து விரிந்த பிரபஞ்சத்தில் உள்ள ஏனையவைபோல நாமும் குணங்களின்படி இழுத்துச் செல்லப்படுகின்றோம். எனவே நாம் மட்டும்தான் ஒரு குறித்த மனநிலையில் இருப்பதில்லை என்று எண்ணவேண்டியதில்லை. ஆன்மா தனது அபிலாஷைகளில் உள்ள இந்த வளர்ச்சி முன்னேற்றத்தில் பிரயாணம் செய்து மிக மேலான அந்த இருப்பை அடைவதற்கு முயலவேண்டி உள்ளது. நாம் தாமசத்தில் இருந்து ராஜசத்துக்கும், ராஜசத்திலிருந்து சத்துவத்துக்கும் நடைமுறை நோக்கங்களுக்காக உயர்ந்து செல்லவேண்டி உள்ளதாகத் தோன்றுகின்றது. ஆனால் அந்தப் பயணம் ஒரு கணித முறையிலான நகர்வாகவோ, முன்பேயுள்ள நடைபாதையிலே செல்வதாகவோ

*தவறுகள் செய்வது குற்றமன்று. தவறுகளை நியாயப்படுத்துவதே குற்றம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதில்லை. நாம் ஒரு நிலையில் மட்டும் முற்றாக இராமல் எப்பொழுதும் மூன்று குணங்களும் கலந்த ஒரு கலவையாகவே இருக்கின்றோம். நாம் நூறு சதவீதம் தாமச மாகவோ, ராஜசமாகவோ, சத்துவமாகவோ இருப்பதில்லை. எம்மிடத்தில் எப்போதும் இம் மூன்று குணங்களும் கலந்தே இருக்கின்றன. எனினும் விழமையான பயிற்சியின் நோக்கத் திற்காக நாம் தாமசத்தில் இருந்து ராஜசத்துக்கும், ராஜசத்திலிருந்து சத்துவத்துக்கும் தற்காலிகமாகப் போகவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

## 18) குண இயல்புகள்

தாமசம் அதிகமாக உள்ளவர்கள் சோம்பேறிகளாயும், அறிவற்றவர்களாயும், சரியாகச் சிந்திக்க முடியாதவர்களாயும், அதிகம் உண்பவர்களாயும், அதிகம் நித்திரை செய்பவர் களாயும் இருக்கின்றனர். ராஜசம் அதிகம் உள்ளவர்கள் அமைதி இல்லாதவர்களாயும், மிகுந்த உற்சாகம் உள்ளவர்களாயும், அங்கும் இங்கும் திரிபவர்களாயும், ஒருபோதுமே அமைதியாக இருக்கமுடியாதவர்களாயும் உள்ளனர். சத்துவம் அதிகம் உள்ளவர்கள் அறிவுள்ளவர்களாயும், அமைதியான நடத்தை உள்ளவர்களாயும், நிம்மதி உடையவர் களாயும், சாதுரியமாக முடிவெடுப்பவர்களாயும் இருக்கின்றனர். இவர்களே சமய, ஆன்மீக நாட்டம் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

## 19) குணம் கடந்தவர்

இந்த உலகில் இருந்து மரணத்தால் பிரிந்து செல்லும்வேளையில் முக்குணங்களில் எது மேலோங்கி இருக்கிறதோ அதனை அவர்கள் இறந்தபின்பும் அநுபவிப்பார்கள். சத்துவகுணம் மேலோங்கி இருக்கும்போது இறப்பவர்கள் தேவதூதர்கள் உள்ள உயர்ந்த உலகங்களுக்கும், சுவர்க்க உலகத்துக்கும் செல்கின்றனர். ராஜசகுணம் மேலோங்கி இருப் பவர்கள் இறந்ததும் அமைதியற்ற செயல்கள் நிறைந்த இந்த உலகத்துக்கே திரும்பி வருகின்றனர். தாமசகுணத்தில் இறப்பவர் நரக உலகங்களுக்குப் பிரக்ஞை இன்றித் துன்பங் களை அனுபவிக்கச் செல்கின்றனர். ஒரு சக்கரம்போல இக் குணங்கள் என்றும் ஒன்று மாறி ஒன்றாகச் சுழன்றுகொண்டு இருக்கின்றன. அவை எந்த ஒரு நேரத்திலும் தம்முள் இசைவான ஒருநிலையில் அமைதியாக இருப்பதில்லை. இந்த முழுப்பிரபஞ்சமும் மூன்று குணங்களினாலேதான் உருவாகி உள்ளது. பிரகிருதியின் தன்மை இம் முக்குணங்களே. பிரகிருதியின் உள்ளும், புறமும் இவை மட்டுமே உள்ளன. பிரபஞ்சத்தைக் கட்டி எழுப்பும் செங்கட்டிகளும் இவையே. பிரகிருதியினுடைய இந்தப் பண்புகளின் இருப்பைப் பற்றற்று மனக்காட்சியில் காணக்கூடியவர்கள் இக் குணங்களின் தன்மைகளால் நடத்தப்படும் ஒரு நாடகமே இவ்வுலகம் என்ற உண்மையை அறிவார்கள். முக்குணங்கள்மூலம் நடிக்கப்படும் இந்தப் பூரண நாடகத்தின் சாட்சியாளர்களாகவே அவர்கள் இருப்பார்கள். அப்படியானவர்கள் அம் முக்குணங்களினால் பாதிக்கப்படாது அவற்றைக் கடந்து நிற்கக்கூடியவர்கள் ஆவர். அத்துடன் அவர்கள் பிரகிருதியின் செயற்பாடுகளைக் கடந்து அப்பால் சென்றவர்கள் ஆவர். அவர்கள் பூரணத்துவம் என்ற பிரமத்துக்குள் நுழைவதற்குத் தகுதி உள்ளவர்களும் ஆவர். (தொடரும்...

*அறியாமையில் உழல்பவர்களுக்கு நன்றும் தீதும் பிரித்தறியத் தெரியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் எனக்கொரு பாட்டை எழுதும் காற்று வந்து இசையமைக்கும்

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

*உனக்கொரு தாய் போல் தனக்கில்லையே*
*என்று இறைவன் கேட்டானோ.*

காலம் என்றால் என்ன? இல்லாதது என்றும் இல்லாதது. இயற்கையின் வசமாய் உள்ளானது. தோற்றமும் முடிவும் தெரியாதது. அது தெரியப்போவதும் தெரியாதது. ஆனால் தொன்றுதொட்டு எம்மிடம் என்றும் நிலைத்து வருகிறது. இப்படி வாழையடி வாழையாக எம்மை வளர்த்து வரும் இக்காலமானது கற்பனைக்கெட்டாத கடவுளையும் தன் அகத்தே கொண்டுதான் இயங்கிவருகிறது. எனவே இந்த இயற்கையான விழுமியங்களை நோக்கரிய நோக்காலும் நுணுக்கரிய நுண்ணுணர்வாலும் எம்மால் நுகர்ந்துகொள்ள முடியாதுள்ளது. அது ஏன் எதற்காக இதற்கேற்றாற்போலவேதான் கோழிக்குள் முட்டை வைத்து முட்டைக்குள் கோழி வைத்து வரப்பிரசாதமாக்கியவனையும் எம்மால் கண்டுகொள்ள முடிவதில்லை.

காலம் என்று கூறும் இச்சொல்லானது கடவுள் என்னும் கருத்துக்கு ஒப்பானது. இக்கருத்தானது இயற்கை இறைமை உண்மை நேர்மை என்னும் கருவூலங்களை தன்னகத்தே உறுதியாக உள்ளடக்கி உள்ளது. இக்காலமானது இல்லாத உலகங்களை உருவாக்கி உயிரினங்களை உற்பத்தி செய்து உலக இயல்புகளை உண்டுபண்ணுவதையே பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால் இந்த உலகம் தன் இயல்புகளை எந்த அளவிற்கு எப்படி கொண்டுசெல்கிறது என்பதையே இங்கு முற்போக்காகக் கொள்ளவேண்டிய தேவை இருந்து வருகிறது.

உயிரினங்கள் தோற்றம்பெறாமல் உலகம் உருவாகாது போனாலும் காலம் காலமேதான். ஆனால் அப்படியாக உலக ஊசாட்டம் இல்லாதுபோனால் காலத்தின் கனதியும் பெறுமானமும் காணாதுபோய்விடும். எனவே இக்காலமானது தனது கனவுகளையும் காட்சிகளையும் கட்டவிழ்த்துவிடுவது என்பது கட்டாயமானதே. எனவே இத்தகைய காலமானது தன் கடமைகளையும் கட்டமைப்புக்களையும் காலம் காலமாக யுகங்கள் யுகங்களாக எம்மோடு கையாண்டு வருவதை எம்மவர்களால் கண்டுகொள்ள முடிகிறது.

மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கிப் பாயும். அதுபோல மனித சக்திக்கு எட்டாத ஒரு முடிவுக்கு உள்ளாகாத காலம் என்ற பேராறு பிரபஞ்ச உற்பத்தியாலும் பரிணாம வளர்ச்சியாலும் தன் உண்மையான யதார்த்தம் எப்படியோ அதற்கேற்றாற்போல் தன் ஆளுமையை நடாத்தி வருகிறது. எதற்கும் ஒரு ஒழுங்குமுறை ஒழுக்காறு உண்டு. அது வழிதவறிப்போவது இயற்கை வலுவுக்கு முரணானது. அப்படிப் போவதற்கு வசதி

*செய்யவேண்டியவைகளை வரையறை செய்துகொள்ளாவிட்டால் செயல் பயன்தராது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்கள் ஒன்றும் இருக்கமுடியாது. அது உண்மை என்ற இறைமையை உறுதிப்படுத்தாது. இல்லாததொன்றை அதாவது உலகங்கள் அண்டசராசரங்களை உயிரினங்களை ஏற்படுத்தியவன் தனக்கு மேல் ஒருவனை எங்கும் எப்போதும் இல்லாதவன் உண்மையானவன் உறுதியானவன் கணக்கற்ற காலமானவன், அனுபவம் எனப்படுபவன். புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகி பல்மிருகமாகி பறவையாய் பாம்பாகி ஈற்றில் மனிதவர்க்கமாகி மாண்புமிகு மண்ணுலகம் மலர்ச்சிகாண காரணமானவன். உயிர்கள்மீது ஈடுபாடு கொண்டு ஒப்புவமை இல்லாக் கருணையானவன். உய்வதனைத்திலும் ஒன்றாய் எங்கும் ஒருபொருள் ஆனவன்.

இந்த மனித குலம் மண்மீது அவதரித்தபோதும் அது மாட்சிமை அடைவது என்பது மிகவும் மந்தகதியில்தான் இடம்பெறுகிறது. எண்ணங்களால் எட்டிக்கூடப் பார்க்க முடியாத இந்தக் காலதேவன் என்ற கடவுளுக்கு இந்த மண்ணுலகம் மட்டும் விதிவிலக்கா?

உலகங்கள் உருவாக்கிகள் உருவங்கள் உத்தமர்கள் எல்லாம் காலதேவனை அடுத்துவந்த கருவிகளே. இதன் பலாபலன்கள் பயன்பாடுகள் எல்லாம் எவ்வெப்போது தேவைப்படுகிறதோ அவ்வப்போதுதான் அவை எல்லாம் அனுகூலம் ஆகும். இதையேதான் காலம் எனக்கொரு பாட்டு எழுதும் காற்று வந்து இசை அமைக்கும் என்று இயம்பினான் கவிஞன்.

காலம் என்றும் கருணை என்றும் அனுபவம் என்றும் அவகாசம் என்றும் போற்றப்படும் இந்த இறைவனானவன் உலக இயங்கியலுக்கு இன்றியமையாத தன் சிருஷ்டிகளில் உருவான உயிர் இனங்கள் எல்லாம் தன்னிலும் மேலான விழுமியங்களைப் பெற்று தரணியில் சிறக்கவேண்டும் என்பதையும் இப்படியான இந்த இறைவனின் அரிய பெரிய நிதியங்களைப்பெற்று பேரின்பமடைவதற்கு அவன் பாதங்களை அகலவிடாது பற்றிக்கொள்ள வேண்டும் என்று உயிரினங்கள் மேம்படுவதையும் எம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

இதற்கமைவாகவே "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவு கொண்ட இறைவன் தான் படைத்த குழந்தையைப் பாராட்டி உனக்கொரு தாய்போல் தனக்கு இல்லையே என்று இறைவன் கேட்டானோ? இன்புற்றானோ இறும்பூதெய்தினானோ என்று கவிஞனும், தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து அருள்வாயே என்று சுவாமி மாணிக்கவாசகர் அங்கலாய்ப்பதையும் எம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

அருவமும் உருவமானது அநாதியானது பலவானது ஓர் அழிவிற்கு உள்ளானது. ஒன்றன்பின் ஒன்றாக உயர்ந்து இறுதியில் ஆறாவது அறிவான பகுத்தறிவான பதிவுக்கு உள்ளானது. இந்த மனித குலமானது பன்நெடுங்காலமாக பற்பல வடிவங்களில் பற்பல பாவனைகளில் பற்பல பயிற்சிமுறைகளில் பாண்டித்தியம் பெறுவதற்கு காலம் தன் கண்ணை அகல விழிப்பதற்கு ஆயத்தம் கொண்டது.

இறையாண்மை கொண்ட ஒரு துறவியிடம் சற்று விவேகம் நிறைந்த இளைஞன் ஒருவன் சென்று வணங்கி, குருவே இந்த உலகில் எல்லோரும் தங்கள் தங்கள் கருமங்களை வேலைகளை தக்கபடியே செய்து வருகிறார்கள். அப்படிச் செய்யும் பழக்கம் என்னிடம்

***மக்களுக்கு ஆரவாரத்தில் உள்ள விருப்பம் அமைதியில் இல்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அப்படிச் செய்யவும் என்னால் முடியாது. நான் என்ன செய்வேன் என்று பணிவுடன் கேட்டான். அதற்கு அந்தத் துறவி செய்யமுடியாது என்று ஒன்றுமில்லை. எதையும் செய்துதான் பார்க்க வேண்டும். அதுதான் அனுபவம் என்றார். அதற்கு அந்த இளைஞன் சுவாமியே எல்லாம் அனுபவம் என்றால் ஆண்டவன் எதற்கு என்றான். அதற்குத் துறவியானவர் மிகவும் அமைதியாக அந்த அனுபவம் என்பதே நான்தான் என்றார். இளைஞன் ஆலோசனைக்கு உள்ளாகி வீடு திரும்பினான்.

நெருப்பின் பயனை கண்டறிந்து உணவைப் பதப்படுத்திய மனிதன் உணவை உண்ணும் உந்துதலினால் உணர்ச்சிதனையும் பெருக்கி நின்றான். உய்யும் வழி தேட உருவாக்கம் கொண்டு எழுந்தான். காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கு ஓர் கருவி செய்வோம் சந்திர மண்டலத்தைக் கண்டு தெளிவோம் சந்தி தெருப் பெருக்கம் சாத்திரம் கற்போம் என்று அன்றே கனவு கண்டான் மகாகவி பாரதி. அன்று கண்ட கனவு இன்று நல்லவண்ணம் நனவாகவே பறவையைக் கண்டான் விமானம் படைத்தான். பாயும் மின்னுலகில் படகினைக் கண்டான் எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான் எதிலும் எல்லாம் ஈடேற்றம் கொண்டான் என்று பாடி வைத்தான் கவியரசு கண்ணதாசன்.

அதாவது கேள்வி பிறந்தது அன்று. நல்ல பதில் கிடைத்தது இன்று. ஆசை பிறந்தது அன்று யாவும் நடந்தது இன்று.

**அடியார் உளத்துறைந்து அமர்பவன்**

*ஆற்றங் கரையுறை வேலவனே*
*அடியார் உளத்துறைந்து அருள்பவனே*
*நீற்றைத் தினம் பூசிடுவார் உளத்தினிலே*
*நின்மதியைக் கொடுக்கும் பெரியோனே*
*ஏற்றமிகு திருப்புகழ் பாடும் அடியார்க்கு*
*எழுந்தருளும் செல்வச்சந்நிதி பெருமானே*
*சோற்றை தினம்மதியம் அருள்வோனே*
*சுந்தர வேலாகி அமர்ந்த சந்நிதிப் பெருமானே.*

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மே | 31 | வை | 17 | சனி | நமிநந்தியடிகள் |
| | | | | | சேக்கிழார் |
| யூன் | 12 | வை | 29 | வியாழன் | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூன் | 29 | ஆனி | 15 | ஞாயிறு | மாணிக்கவாசகர் |

*மக்களுக்கு திருவிழாக்களில் உள்ள ஈடுபாடு வழிபாட்டில் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருக்கயிலாயம்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

இந்தப் பயணம் முழுவதும் மலைகளின் ஊடாகத்தான் போகவேண்டும். போகும் பாதை கடல் மட்டத்திலிருந்து சுமார் 12600 அடி உயரத்தில் இருக்கிறது. யாத்திரிகர்கள் அங்கே இறங்கி நின்று சரியான குளிரின் மத்தியில் இயற்கைக் காட்சிகளைப் பார்க்கலாம். யாத்திரிகர்கள் யாவரும் கம்பளி உடைகளை அணியவேண்டும். போகும் வழியில் சில இடங்களில் சமவெளியும் வரும். போய்க்கொண்டிருக்கும்போது, அழகான இயற்கைக் காட்சிகளைப் பார்க்கலாம்.

ஆங்காங்கு சிவபெருமானின் இலிங்கம் போன்று மலைகள் காட்சி தரும். அவற்றிலிருந்து வரும் அருவிகள் சிவனின் சிரசிலிருந்து கங்கை நதி பாய்ந்துவருவது போன்று இருக்கும். இந்த இடத்தில் திபெத்தியர்கள் பிரார்த்தனைக் கொடிகளைக் கட்டியிருப்பதைப் பார்க்கலாம். வழி வழியே பனிப்பாறைகள் விழுந்து போக்குவரத்துச் செய்யமுடியாமல் இருக்கும். உடனே சீன இராணுவம் புல்டோசர்மூலம் அவற்றை அகற்றிவிடும். இரண்டு மணித்தியாலத்தில் நயாலம் என்ற இடத்தை வந்தடையலாம். இந்த இடம் கடல் மட்டத்திலிருந்து 12010 அடியாகும்.

இங்கே இறங்கி யாத்திரிகர்கள் சற்று ஓய்வெடுக்கலாம். (யாத்திரிகர்கள் யாவரும் ஜீப்பில்தான் போகவேண்டும்) இங்கே சற்றுத் தள்ளி ஹோட்டல் இருக்கிறது. அதில் தங்கியிருக்கலாம். இங்கே சரியான காற்று புயல்போல் அடித்துக்கொண்டேயிருக்கும்.

பின் அடுத்தநாள் ஜீப் மலைப்பகுதியால் சமதரை வழியாகத்தான் போகும். இது தரைமட்டத்திலிருந்து 12600 அடி உயரம் ஆகும். இங்கு பனியால் மூடப்பட்ட பல சிகரங்கள் தெரியும். பல மலைகள் தெரியும். அவற்றைப் பார்க்க மிக அழகாக இருக்கும் இந்தப் பனிமலையின் சிகரம் விநாயகர் உட்கார்ந்திருப்பதுபோல் தெரியும். மற்றும் சிவபெருமான் பிறையுடன் இருப்பதுபோல் தெரியும்.

ஒரு மலை நீண்ட உயரத்தைக் கொண்டது. இம் மலை சிவபெருமான் படுத்திருப்பது போன்று தெரியும். இப்படிப் போய்க்கொண்டிருக்கும்போது மாலை ஆறு மணியாகிவிடும். பிகுட்ஸோ என்ற இடத்தின் ஆற்றங்கரையில் திறந்தவெளியில் கூடாரங்கள் போட்டுத் தங்கவேண்டி வரும். இங்கே ஒரு மரங்களும் கிடையாது. விடுதிகளும் ஒன்றும் இல்லை. இந்த இடம் கடல் மட்டத்திலிருந்து 15700 அடி உயரத்தில் இருக்கிறது. இங்கே சரியான குளிராக இருக்கும். வெப்பநிலை 15 பாகையாக இருக்கும்.

அடுத்தநாள் ஜீப்பில் பிகுட்ஸோ என்ற இடத்திலிருந்து சாகாவிற்கு போக வேண்டும். இப்படிப் போய்க்கொண்டிருக்கும்போது, பிரம்மபுத்திரா நதிக்கரைக்குப் போய்ச் சேரலாம். பின் திபெத்தியர் ஜீப்பையும் யாத்திரிகர்களையும் படகுமூலம் மறுகரைக்குக் கொண்டு

*மனிதனை வளர்க்காத எந்தச் செயல்முறையும் பயன் தருவன அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து விடுவார்கள். பின் ஆற்றங்கரையிலிருந்து "சாகா" என்ற இடத்திற்கு வரவேண்டும் இங்கே உள்ள விடுதியில் தங்கலாம். சாகா என்ற இடம் கடல் மட்டத்திலிருந்து 14460 அடி உயரமாகும்.

சாகா பிகுட்ஸோவிலிருந்து 150 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. சாகாவில் விடுதியில் தங்கலாம். திபெத்தியர் யாத்திரிகர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வார்கள். மொழி ஒரு பிரச்சினையாக இருந்தாலும், கை அசைவுமூலம் செய்யவேண்டிய சகல வேலைகளையும் செய்து கொடுப்பார்கள்.

பின் சாகாவிலிருந்து பர்யாங் என்ற இடத்துக்குப் போகவேண்டும். போகும்போது பாதை முழுவதும் மணல், அதாவது வனாந்தரம்போல் காட்சியளிக்கும். ஒரு இடமும் மரம் கிடையாது. எங்கு பார்த்தாலும் பனி சூழ்ந்த மலைகள்தான் தென்படும். அத்துடன், சரியான குளிர்காற்று அடித்த வண்ணம் இருக்கும். போகும் வழியில் பல இடங்களில் யாக்குகள் (காட்டு எருமைகள்), குதிரைகள் இறந்திருக்கும். வழியில் அநேக இடங்களில் சீன இராணுவத் தினரைக் காணக்கூடியதாக இருக்கும்.

பர்யாங் போகும் பாதை மிகவும் மோசமாகத்தான் இருக்கும். அதனை மிகவும் கஷ்டத்தின் மத்தியில் இருள் வரமுன்னம் போய்ச்சேரவேண்டும். வழியில் சிறு ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கும். பர்யாங் வந்து சேர்ந்தபின் அங்கே மண் அறைகள் எடுத்துத் தங்கலாம்.

எங்கு பார்த்தாலும் பனியால் மூடிய மலைச் சிகரங்கள் காட்சியளிக்கும். இங்கே விடுதிகள் யாவும் மண்ணால் கட்டப்பட்டன. எல்லா விடுதிகளிலும் எங்களுக்குத் தேவையான வெந்நீரைப் பெற்றுக்கொள்ளலாம்.

வழியிலுள்ள சிறு ஆறுகள் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கும். இந்தப் பாதை மலையில் ஏறி, பின் இறங்கித்தான் போகவேண்டும். பின் சரியான கஷ்டத்தின் மத்தியில் பர்யாங் வந்துசேரவேண்டும். இந்த இடத்தில் மண்ணால் அமைக்கப்பட்ட அறைகளில்தான் தங்கலாம். இப்படி மிகக் கஷ்டத்தின் மத்தியில் அன்று அங்கே கழிக்க வேண்டும். சரியான சாப்பாடு கிடையாது. சரியான குளிராகத்தான் இருக்கும். பனியால் மூடிய மலைச் சிகரங்கள் தெரிந்தவண்ணமிருக்கும். குளிர் காற்றுக் கடுமையாகத் தாக்கும். மலைகளில் விநாயகர், முருகன், அம்பாள், நந்திதேவர் போன்றவர்களின் திருவுருவங்கள் பல இடங்களில் மிகவும் அழகாகத் தெரிந்தவண்ணம் இருக்கும். மேலும் பல இடங்களில் பனிப்பாறைகள் உண்டு. இங்கு ஒரு மரமும் கிடையாது. எல்லா இடங்களும் மணல் தரையாகத்தான் இருக்கும்.

சீன இராணுவத்தினரைப் பல இடங்களில் காணக்கூடியதாக இருக்கும். இராணுவ வீரர்கள் சீருடை இல்லாமல் குளிர் தாங்கக்கூடிய உடையில் இருந்தார்கள். பின் இங்கிருந்து ஜீப்பில் போய்க்கொண்டிருந்தால், முதலில் மாந்தாதா மலை வரும். இந்த மலைக்குப் பெரிய கதை உண்டு. அதாவது, மாந்தாதா என்பவர் காசி நகரின் அரசனாக இருந்தவர். இவர் ஸ்ரீ ராமபிரானின் முன்னோர்களில் ஒருவராவார். இவர் அரச வாழ்க்கையைத் துறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயமலையில் வந்து தங்கியிருந்து தவம் செய்தார். அவர் தவம் செய்த மலைக்குப் பின்னர் மாந்தாதா என்ற பெயர் ஏற்பட்டது. இந்த மலை மனோசரோவர் என்ற ஏரிக்கு தென்புறத்தில் உள்ளது. உறை பனியால் மூடப்பெற்றிக்கும் மானசரோவர் என்ற ஏரி மாந்தாதா மலைக்கும் கயிலாயமலைக்கும் இடையில்தான் இருக்கிறது.

மேலும், இந்த மலைக்கு வேறு பல சிறப்புக்களும் உண்டு. இங்கே ஓர் அழகான குகை உண்டு. இந்தக் குகையில்தான் விநாயகப் பெருமான் அவதாரம் செய்தார். என்று கூறப்படுகிறது. அத்துடன், திருமுருகனும் இந்த மலையில்தான் அவதாரம் செய்தார் என்று கூறப்படுகிறது. இந்த மலையின்மீதுதான் அவதாரத்துடன் தொடர்புடைய சரவணப் பொய்கையும் இருக்கிறது என்று கூறப்படுகிறது.

இந்த மாந்தாதா மலை பல பெரிய மலைகளையும் பல சிறிய மலைகளையும் அடுத்தடுத்துத் தொடராகக் கொண்டிருக்கிறது. இது அகலத்திலும் நீளத்திலும் பெரிய மலையாகும். இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 25335 அடியாகும். இந்த மலை கிட்டத்தட்ட 15 கிலோமீற்றர் நீளமாக இருக்கிறது. இந்த மலையில் பல இடங்களில் மேடைகள் இருப்பது போலவும் பல பெரிய தூண்கள், கட்டடங்கள் தெரிவது போலவும் இருக்கும். இந்த மலையில் பல இடங்களில் பனிப்பாறைகள் காணப்பட்டன. யாத்திரிகர்கள் ஜீப்பிலிருந்து இறங்கி, இந்த மலையைப் பார்த்து விநாயகரின் துதிப்பாடல்கள், விநாயகர் அகவல் முதலியனவற்றைப் பாடுவார்கள். இங்கேதான் விநாயகரின் அருள் கிடைக்கும். இதேபோன்று முருகப்பெருமானின் துதிப்பாடல்களையும் பாடுவார்கள்.

பின் தொடர்ந்து ஏரிக்கரையால் போய்க்கொண்டு இருக்கும்போது பலவிதமான அழகான பறவைகளைக் காணக்கூடியதாக இருக்கும். இப்படியான பறவைகள் ஒரு இடமும் காணமுடியாது. அந்த நேரம் பனிமழையும் பெய்துகொண்டேயிருக்கும். இப்படிப் போய்க்கொண்டு இருக்கும்போது, கயிலையின் தரிசனம் கிடைக்கும் யாத்திரிகர்கள் எல்லோரும் ஜீப்பால் இறங்கி வீழ்ந்து வணங்க வேண்டும். இதேநேரம் மானசரோவர் ஏரிக்கு வந்து சேரலாம்.

பின் அன்று இரவு மானசரோவர் ஏரிக்கரையில் இருக்கும் வேறொரு விடுதியில் போய்த் தங்கலாம். இந்த இடத்திலிருந்து கயிலைநாதரை அழகாகத் தரிசிக்கலாம். இனி சற்று மானசரோவர் ஏரியைப் பற்றிப் பார்ப்போம்.

இந்த ஏரி கடல் மட்டத்திலிருந்து 17000 அடி உயரத்தில் மிகவும் அமைதியாக விளங்கும் மிகப்பெரிய ஏரியாகும். இதன் சுற்றளவு 54 மைல் ஆகும். ஆழம் 300 அடி ஆகும். 200 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. இந்த ஏரியை பிரதட்சணம் செய்ய மூன்று நாட்கள் தேவைப்படும்.

வசிஷ்டர், மரீசி முதலான முனிவர்கள் ஒரு சமயம் கயிலாயத்தில் இருந்து கடுந்தவம் செய்து வந்தார்கள். தாங்கள் நீராடி சிவபெருமானை வழிபடும் பொருட்டுத் தங்களுக்கு ஒரு நீர்நிலையம் வேண்டும் என்று பிரமதேவரிடம் பிரார்த்தனை செய்தார்கள். அவர்களின் பிரார்த்தனைக்கு பிரமதேவர் தனது மனதிலிருந்து இந்தத் தெய்வீக ஏரியைத் தோற்றுவித்தார். அதாவது, பிரமாவின் மனதிலிருந்து தோற்றியதால் இந்த ஏரி மானசரோவர் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகிறது. மானசரோவர் ஏரி கயிலாயத்தின் தென்புறத்தில் 32 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

மானசரோவர் ஏரி 51 சக்தி பீடங்களில் ஒன்று என்று புராணங்கள் கூறுகின்றன. மானசரோவர் ஏரி உமாதேவியின் வடிவம். பார்வதிதேவியின் சொரூபம். அம்பிகையே இங்கு மானசரோவர் ஏரி வடிவத்தில் இருக்கிறார் என்பது ஐதீகம்.

இராமாயணத்தில், "இமயமலையைப்போல் சிறந்த மலை வேறு எங்குமில்லை. ஏனென்றால், கயிலாயமலையும் மானசரோவர் ஏரியும் அந்த மலையில் இருப்பதால், இது சிறப்புப் பெறுகிறது" என்று இமயமலையைப் பற்றிச் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மகாகவி காளிதாசர், "கயிலாயமலையை விட பக்கத்தில் உள்ள மானசரோவர் ஏரியின் அழகில் மயங்கி இருக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

எவன் ஒருவன் இப்புனித மானசரோவர் ஏரியின் மண்ணைத் தொடுகின்றானோ, எவன் ஒருவன் இப்புனித ஏரியில் நீராடுகின்றானோ அவனுக்கு ஏழு ஜென்மப் பிறப்பின் பாவங்களிலிருந்தும் விமோசனம் கிடைக்கும். இனிப் பிறவாமை எனும் பெரும்பேறு கிடைக்கும். அவன் சிவபெருமானின் திருவடிகளைச் சென்றடைவான். இப் புனித ஏரியின் பளிங்கு போன்ற தெளிந்த நீரைக் குடிக்கலாம். அவனுக்குப் பாவ விமோசனம் கிடைக்கும். இந்த ஏரியிலுள்ள பளிங்கு போன்ற நீர் நீரல்ல, அது ஒளிரும் முத்து.

மேலும், புராணங்களில் மானசரோவருக்கு மத்தியில் கற்பக விருட்சமும் மிகப்பெரிய தாமரை மலரும் இருப்பதாக விபரிக்கப்பட்டிருக்கிறது. மகாபாரதத்தில் வரும் பிந்துசாகரம் இதுவேயாகும்.

மானசரோவரின் நீர்ப்பரப்பு ஆவுடையாராகவும், கயிலைமலை இலிங்கமாகவும் காட்சியளிக்கின்றன. மானசரோவர் ஏரியில் அழகான வர்ணக் கற்கள் காணப்படுகின்றன. இந்தக் கற்களை பூஜை அறையில் ஒரு பாத்திரத்தில் வைத்துத் தினமும் காலையில் நீர் ஊற்றி வந்தால், அந்த நீர் மானசரோவர் நீராக மாறும். வீட்டில் இலட்சுமி கடாட்சம் உண்டாகும். இந்த ஏரி மிகவும் உயரத்தில் இருப்பதால், கோடையில் எப்போதும் குளிர்ந்த பனிநீராகவும் குளிர்காலத்தில் பனிக்கட்டியாகவும் மிதக்கும்.

மேலும், மானசரோவர் ஏரி காலையில் நீலமாகவும், பிற்பகல் நான்கு மணிக்கு வெள்ளை வெளேரென்றும், மாலை ஆறு ஏழு மணிக்குத் தங்கநிறமாகவும் இருக்கும். 300 அடி உள்ள ஆழத்தில் இருக்கும் கற்கள் நன்கு தெரியும்.

கயிலாய மலையும் மானசரோவர் ஏரியும் தொன்றுதொட்டு இந்துக்களுக்குப் பெரும் புண்ணியத் தலங்களாக இருந்து வருகின்றன. இந்த மானசரோவர் ஏரி கடல்போல்தான் காட்சியளிக்கும். ஆனால், கடல்நீர் நீல நிறமாக இருக்கும். மானசரோவர் ஏரி நீர் பச்சை நிறமாக இருக்கும். கடல் நீர் உப்பாக இருக்கும். ஆனால் மானசரோவர் ஏரி நீர் நன்னீராக இருக்கிறது. இந்த ஏரிக்குப் பக்கத்தில் பல வெந்நீர் ஊற்றுக்கள் இருக்கின்றன. அதனால் இந்நீர் அவ்வளவு குளிராக இல்லை. பின் ஜீப்பின் மூலம் ஜெயந்தி என்ற இடத்திற்குப்போய் இரவு தங்கவேண்டும். இங்கே அழகான கயிலாய தரிசனம் கிடைக்கும். யாத்திரிகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவார்கள். சிலருக்குத் தெய்வீக ஆனந்தம் ஏற்பட்டுக் கண்களிலிருந்து கண்ணீரும் வரும். யாத்திரிகர்கள் அங்கே நின்று திருவாசகம், பின் சிலர் நமசிவாய வாழ்க என்று ஆரம்பித்துச் சிவபுராணம் முழுவதும் பாடுவார்கள். சைவத் திருமுறைகளிலிருந்து பல பகுதிகளைத் தொடர்ந்து பாடிக்கொண்டு இருப்பார்கள். சிலர் மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சியும் பாடுவார்கள்.

மானசரோவர் ஏரிக்கரையில் இருக்கும் ஹோரே இடத்திற்குப் போய் அங்கே தங்கலாம். இந்த இடத்திலிருந்து கயிலைநாதரை மிக அழகாகத் தரிசிக்கலாம். இந்த இடத்திலிருந்து ஒருபோதும் தரிசிக்காத பறவைகளைப் பார்க்கக்கூடியதாக இருக்கும். மேலும், இந்த விடுதியிலிருந்து இயற்கையின் வனப்பையும் அழகையும் கண்டுகளிக்கக்கூடியதாக இருக்கும்.

(தொடரும்...

## ஆடிப் பாடி நாடிடுவோம் சேவற் கொடியோனை

*அன்பரைக் காக்கும் அழகிய வேலன்நீ*
*அன்னை பராசக்தி மைந்தனும்நீ - என்றும்*
*பெருந்துயர் போக்க அருள்வாய் நிதமும்*
*அருந்தவ அன்பர் எமக்கு.*

*கொஞ்சி விளையாடிக் காண்பாய் குழந்தையாய்*
*அஞ்சியோட வைத்தாய் அசுரரை - அஞ்சாத*
*நெஞ்சனே பேதலிக்கு மெம்பிழை ஏற்றுநீ*
*வஞ்சிக்கா தெம்மைக்காப் பாய்.*

*ஆடித் தொழுதோம் பெருங்கா வடியுடன்*
*பாடித் தொழுவோம் அறுமுகனை - தேடி*
*அலைந்தோம் அருள்தர தாமதமேன் வேலா*
*சிலையாகிப் போனாயோ சொல்.*

*ஆற்றங் கரையில் அடியார்க் கருளிய*
*வீற்றிருக்கும் சுந்தர வேலனை - போற்றின்*
*குருவாகத் தோன்றி யவனடி யார்க்கு*
*பெருவாழ் வளிப்பான் நம்பு.*

*நல்லூர் பதிநாதன் நம்கந்தன் நற்குமரன்*
*நல்லோராய் வாழவைக்கும் நற்குணன் - இல்லார்*
*கருணை பொழியும் கடம்பன் கழலை*
*வருடிவணங் கின்னல் விலகும்.*

***-சீ. சாந்தநாதன்-***

***தன்னையே நினைத்துக்கொண்டு இருப்பவர்கள் ஒருபோதும் பயன்படமாட்டார்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 94

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 வெண்ணிலா தன்னைத்தேடி வேகமாய் விரைந்து சென்று
தண்ணொளி பரப்பும் தரையை கிண்டியே அள்ளிவந்து
மண்ணுக்குள் என்னஉண்டு என்றறிய முயன்றிடும்நாம்
அண்மைக்குள் நிற்கும் மாந்தர் மகிமையை அறிவதுண்டோ.

02 இறைவனைத் தேடிக் காணஇடையறா முயற்சிசெய்து
குறையேது விட்டோமென்று அதனையும் நிறைவு செய்து
மறைவாக நின்றுதானும் இறைகாண முயன்றிடும்நாம்
உறைகின்றான் எம்முள் என்ற உண்மையை உணர்வதுண்டோ.

03 தர்மங்கள் செய்யவென்று தடல்புடல் பலவும் செய்து
அர்த்தங்கள் பலவும் சொல்லி அவைதனுக் குணவளித்து
கர்வமும் கொஞ்சமோங்க களித்திட முயன்றிடும்நாம்
நிர்க்கதியினோர்க்குதவ நினைத்தேதும் செய்வதுண்டோ.

04 மாடிமேல் மாடிகட்டி மணவறை பலதும் வைத்து
கொடிகள் பலதைக்கொட்டி சொகுசுகள் பலதும் செய்து
நீடித்த இன்பங்காண நினைத்திங்கு முயன்றிடும் நாம்
கூடியே வாழக்கூடக் குடிசை இல்லாரை நினைப்பதுண்டோ.

05 போட்டியாய் ஒன்றைவைத்து பொருளொன்றைப் பரிசாய்க்காட்டி
ஈட்டியே அதனைவெல்வோர் இணையில்லா வீரரென்று
சூட்டியே பெயரும் புகழும் சூவென்று வியந்திடும் நாம்
நாட்டிலே அதையே தொழிலாய்ச் செய்வோரை நயப்பதுண்டோ.

06 கோயில்கள் பலதைக்கட்டி கோபுர வளமும் சேர்த்து
பாயிரம் பலதும்பாடிப் படையல்கள் படைத்துவைத்து
ஆயிரம் தடவைஜயன் பேர்சொல்லி வணங்கிடும் நாம்
கோயில்கள் யாருக்கென்ற உண்மையை உணர்வதுண்டோ.

*செயல்கள் செய்வதைவிட அச்செயல்கள்வழி பயன் காண்பதே பெருமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பட்டங்கள் பலதும் சூட்டி பதவிகள் பலதும் பெற்று
திட்டங்கள் பலதும் தீட்டி தேசத்தில் உயர்ந்திருந்து
மட்டிலா நிலையிலுள்ளோம் என்றிங்கு மகிழ்ந்திடும் நாம்
கிட்டவே சென்றோர் சீவன் குறைசொல்லக் கேட்பதுண்டோ.

08 வட்டமாய் மேசைவந்து வரிசையாய் அமர்ந்திருந்து
சட்டமும் கொஞ்சம் சேர்த்து சபைகளில் முழக்கம் செய்து
எட்டிடும் திசைகளெல்லாம் எடுத்ததை இயம்பிடும் நாம்
கெட்டுமே நொந்தார் தம்மை ஏன்கெட்டார் கேட்பதுண்டோ.

09 சுட்டபொன் நகைகள்சூடி சுடாதநிற உடைகள்போட்டு
அட்டமயல் அசத்துபோக அலங்காரம் பலவும் செய்து
மெட்டுக்குப் பாட்டுப்போல வளத்தோடு வாழ்ந்திடும் நாம்
கட்டவே உடையிலாரைக் கண்டுமனம் கசிவதுண்டோ.

10 முழுவியளம் பார்த்தனுப்பி கண்ணூறும் படாதெரித்து
தம்மவரின் நலன்பேணி நாளாந்தம் பலவும் செய்து
தன்னலக் குதிரையேறி தரைவாழ்வைக் கடத்திடுவோர்
பிறர்நோகும் தம்நடையைக் கிஞ்சித்தும் உணர்வதுண்டோ.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
| --- | --- |
| செந்திவேல் மோகனதாஸ் | செந்திவேல் மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெண்காட்டில் தேனாகியது திருவாசகம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

சப்த தீவுகளில் அழகான, அதிசயமான, அறிவான தீவாக மண்டைதீவு விளங்குகிறது. யாழ் நகரிலிருந்து ஆறு கிலோமீற்றர் தூரத்தில் இயற்கை அழகு ஒளித்திருக்குமாறு, இறைவன் பூத்திருக்கும்படியாக, உல்லாசப் பிரயாணிகளுக்கு விருந்தான திருவூர் மண்டைதீவு ஆகும். ஒரு காலத்தில் தன்னிறைவோடு விளங்கிய, தாயான தயவானவூராக இலங்கையர் களால் உச்சரிக்கப்பட்ட தித்திக்கும் ஊராக மண்டைதீவு விளங்கியது. போருக்குப் பின்னால், தன் சோபையை இழந்தபோதும் மீண்டும் மின்னுமாறு இலங்குகிறது. காரணம் மண்டைதீவு வாழ் மக்கள் சமய சமூக பொருளாதார வாழ்வில், தீர்க்கதரிசிகளாக விளங்கிய தன்னம்பிக்கை யாளர்கள் வாழ்ந்து வருவதனால்போலும். இதன் பேறாக, ஆன்மீக வாழ்வானது தித்திக்கின்றது.

ஆலயத்தொண்டின்மீது அதீதபக்தியும், அதிக ஆர்வம்கொண்ட காரணத்தினால் மண்டைதீவு வாழ் மக்கள் மகத்தான வெற்றியைப் பெற்று வருகிறார்கள். அவ்வாறானவர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கின்றார்கள். இடம்பெயர்ந்தபோதும், மண்டைதீவுக்கு வரம் சேர்த்தார்கள். தற்பொழுதும் மண் வாசனையானது, தோற்காமல் இரட்டிப்பாக வீசுகிறது. ஆன்மீகம் அங்கே விளைகிறது.

ஆமாம்! இத்தகு பதியில், பல ஆலயங்கள் அருள்பாலிக்கின்றன. ஆறுதல் தருகின்றன. அழகு பெருக்குகின்றன. அங்கு அற்புதம் நிறைந்த, பொற்புடன் மிளிர்கின்ற ஆலயமே மண்டைதீவு, திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயமாகும். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாயமைந்த ஆகமத் திருத்தலம் இதுவாகும். எழுபத்து மூன்று வருடங்களில் முதன் முதலாக இத் திருப்பதிக்கு யாம் சென்று, தரிசிக்கும் வாய்ப்பு எமக்கு வரமாகியது. வானுயர்ந்த கோபுரம் எம்மை வாவென்றழைத்தது. பழுத்த பழமான அடியார்களின் திருவாசகப் பண்பாடு எம்மைக் கவர்ந்தது அடேயப்பா!

சிவபுராணம், கீர்த்தித் திரு அகவல், திரு அண்டப்பகுதி, போற்றித் திரு அகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள்நோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயில்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளி எழுச்சி, கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருள்பத்து, திருக்கழுக்குன்றம், கண்டபத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்பத்து, அச்சப்பத்து, திருப்பாண்டிப்பதிகம், பிடித்தபத்து, திருஏசறவு, திருப்புலம்பல், குலாப்பத்து, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, எண்ணப்பதிகம், யாத்திரைப்பத்து, திருப்படை எழுச்சி, திருவெண்பா, பண்டு ஆய நான்மறை, திருப்படை ஆட்சி, ஆனந்தமாலை, அச்சோப் பதிகம் என ஐம்பத்தொரு (51) பதிகங்களையும் மோகனத்தேன் சொட்டுமாறு ஆன்மீக

*செய்யமுடியவில்லை என்று திட்டமிடவே பயப்படுகிறவர்கள் ஒன்றுமே செய்யமாட்டார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகத்தை அள்ளிச் சொரிந்தனரெனலாம். ஓதுவார்களும், ஆலயம் சார்ந்த அடியார்களும், அந்தணப் பெருமக்களும், நிர்வாகத்தினரும் ஒருங்கே சேர்ந்து, திருவாசகத்தேனை, மண்டைதீவு மண்ணில் நனைந்திடச் செய்தார்கள். தவத்திரு வேலன் சுவாமிகளும் உடன் இருந்து சிவப்பேறு உகந்தார். தேவர்களும் வந்து வாழ்த்தியது போன்று நெஞ்சிலே திருவாசகம் இனித்தது. கண்ணீர் மல்கியது. 2026இலும் திருவாசகம் திருவெண்காட்டில் தேனாகட்டும்.

## அறநெறி

ஒருவன் நல்லவனாக, மதிப்புள்ளவனாக வாழ்வதற்கு இன்றியமையாத நெறிகளில் ஒழுக்கங்களில் அறநெறி இன்றியமையாதது.

மனித வாழ்வு மகத்துவமானது. தெய்வீகமானது. தனித்துவமானது. தன்னிகரல்லா இறைவன் எம்மீது கொண்ட பேரன்பினால் எமக்கு இந்த மனிதப் பிறவியைத் தந்திருக்கிறான். அப்பிறவியைச் செம்மையாகப் பயன்படுத்தி வாழவேண்டுமெனில் சிறுவயது தொடங்கியே நாம் அறநெறிகளுடன் வாழவேண்டும்.

அறம் என்பது தர்மம், நீதி, நேர்மை, கருணை, உண்மை, கொடை என்னும் பல்வேறு பொருள்களை உடையது. ஒருவன் தனது வாழ்வில் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அறம்புரிவதன்மூலமும் அவன் தேடிய செல்வத்தின்மூலமும் பிறருக்கு நன்மைபுரியுமிடத்து அதுவே அறநெறிப்பட்ட வாழ்க்கையாகும். ஒருவன் மனத்தால் செய்யும் அறம் கடவுள் உணர்வும் நற்சிந்தனையும் ஆகும்.

மொழியால் புரியும் அறம் ஆண்டவன் திருநாமம் ஓதிப் புகழ்பாடுதலும் பிறருக்கு துன்பம் பயராத இனிய மொழிகளைக் கூறுதலும் ஆகும்.

உடலால் புரியும் அறம் ஆண்டவனை மலர்கொண்டு பரவுதல். அடியவர்க்கு தாய், தந்தை, குரு, முதியவர் ஆகியோருக்கு தொண்டு செய்தல். பிற உயிர்களுக்கு நன்மை செய்தலுமாகும்.

அறநெறி வாழ்க்கை எப்போதும் வெற்றி தரும். சில சந்தர்ப்பங்களில் தோல்வியைத் தருவதுமாகத் தோன்றினாலும்கூட ஈற்றில் வெற்றியையும் சிறப்பையுமே தரும். அறநெறி எண்ணங்களை மனதில் எண்ணவேண்டும். செயலிலும் செயலாற்ற வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், கள்ளம், கபடத்தனம், போலித்தனம், பேராசை இவையெல்லாம் அறநெறி வாழ்வின் எதிரிகள். அவை மனதில் குடிகொள்ளாது சிறு வயதிலிருந்தே எம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் மனிதர்களிடம் அறநெறிகள் குடிகொண்டால் மட்டுமே சீரான, சிறப்பான, நேர்மையான, நீதியான, ஒழுங்கான, பண்பான சமுதாயம் உருவாகும். அறநெறி குன்றிய சமூகம் மேல்நோக்கி எழுவது மிகவும் கடினம். அதனிடம் எழுச்சியிருக்காது. எழுச்சி இல்லாவிடில் உயர்ச்சி வராது. எங்களது இன்றைய துன்பங்களும், துயரங்களும் ஒட்டுமொத்தமாக வினையாக ஊழாகச் சேர்ந்து திரண்டு நிற்பது ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு சாராரிடமும் காணப்பட்ட அறநெறி இன்மையே.

அறநெறி மேன்மை தரும் ஆகையால் அறநெறியை ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் ஒழுக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ஒழுக்கம் விழுப்பம் தருவதாலேயே அது உயிரினும் மேலாக ஓம்பப்படுகிறது. ஆகையால் உள்ளங்களில் அறநெறியை வளருங்கள்.

**-இ. சரவணபவன்-**

*வயிறாரச் சாப்பிட விரும்புகிறவர்கள் உடலார உழைக்க முன்வரவேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருவடிப் பெருமை

**– திரு செ. பாலச்சந்திரன்** அவர்கள் –

அவன் அருளைத் துணையாகக் கொண்டு திருமுறைகளின் தெய்வீகக் கருணையைப் பற்றிப் பிடித்து நுணுக்கரிய நுண்ணுணர்வைப் பெறலாம் என்ற நற்சிந்தையுடன் பன்னிரு திருமுறையாகிய தோணியைத் துணையாகக் கொண்டு திருவடியின் திருவருளைப்பெற இக் கட்டுரையை தொடர்ந்து எழுதும் திருவருட் துணிபு கைகூடியுள்ளது.

எம்பெருமானே! "சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் புன் அறிவுப் புலையனை சிறியேன் நின் திருவடிப் பெருமையைக் குறைவுபடாமல் நிறைவாக எழுத அருள் புரிவாயாக" என எந்நியும் தரும் சந்நிதியான் திருப்பாதங்களை எண்ணி மாதம்தோறும் வரம் தர வரும் ஞானத்தின் திருவுருவாக, மேலான செல்வமாகிய மந்திரமாகிய, தந்திரமாகிய விபூதிப் பிரசாதத்துடன் எம் வினை போக்கவரும் சுடர் ஞானச்சுடர் ஆகும். இஞ் ஞானச்சுடர் சஞ்சிகையில் அவன் எழுது என என்னுள் இருந்து திருவருள் எழுச்சியைத் தந்து எழுத வைத்த கைங்கரியம் இதுவாகும்.

முருகனே! செந்திமுதல்வனே! மாயோன் மருகனே!
ஈசன் மகனே! ஒருகைம்முகன் தம்பியே
நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

(11ஆம் திருமுறை)

என்று "திருவடியை நம்பிக் கைதொழுவேன் நான்" என்ற நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப்படையில் எம்மை எல்லாம் ஆற்றுப்படுத்தும் விதமாகப் பாடியுள்ளார்.

மோகனதாஸ் சுவாமிகள் செயற்கரிய செயல்கள் பலவற்றை ஆற்றுகின்றார். அன்ன தானக்கந்தன் திருமுன்றலில் அவன் பெயரில் ஆச்சிரமம் அமைத்துப் பசிப்பிணியைப் போக்குகின்றார். அதுமட்டுமல்லாமல் பிறவிப்பிணியைப் போக்கும் விதமாகப் பல அடியார் களையும் முருகன்பால் ஈர்த்து ஞானச்சுடர்மூலமாக தரும கைங்கரியங்கள் பலவற்றை எல்லாம் "எம்பெருமான் தருகிறான். சிறியேன் செய்கிறேன்" என்று கூறியவாறு செயற்படுகிறார். உலக மறையாகப் போற்றப்படும் திருக்குறள் விளக்கம் இவர் செயற்பாட்டுக்கு உதாரணம் எனலாம்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

(திருக்குறள்)

இராமபிரானுக்குப் பாலம் கட்ட அணில் உதவியதுபோலச் சிறியேனும் ஞானச்சுடரில் இத் தொடரை எழுதக்கிடைத்த திருவருள் சம்மதமாகக் கொண்டு தொடர்கின்றேன். முதலாம் திருமுறையில் "திருமருகலும் திருச் செங்காட்டங்குடியும்" ஆகிய திருத்தலத்தில் "நட்டபாடை"

*காரியம் ஒன்றுபோலத் தோன்றும். ஆனால் அதன் காரணங்கள் ஒன்றல்ல பலவேயாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணில் எம்பெருமானின் திருவடிப் பெருமையை ஞானக் குழந்தையாகிய திருஞானசம்பந்தர் எப்படி விளம்புகின்றார்? ஆறு அங்கங்களாகிய (சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சூத்திரம்) ஆறங்கத்தையும், நால் வேதத்தையும் (இருக்கு, யசுர், சாமம், அதர்வனம்) தமது நாவினால் ஓதும் அந்தணர் பெருமக்கள் அடிபரவுகிறார்கள் என்று அதுவும் மிக்க அன்புடன் (காமுறவே) எனத் தெய்வத் தமிழால் கீழ்வருமாறு ஓதுகின்றார். நாமும் ஓதுவோமாக!

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமு மோதுநாவர் அந்தணர் நாளு மடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதிமருக னிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே.

திருச்சிற்றம்பலம்

மேலும் முதலாம் திருமுறையில் திருவண்ணாமலைமீது ஞானக்குழந்தை பாடிய பாடல் ஒன்றில்

"...பொழிலண்ணா மலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார் வினையிலரே"

என்று எம்பெருமான் திருவடியை நினைந்து வணங்கும் அடியார்களுக்கு வினைப் பயனற்ற பெருவாழ்வு கிட்டும் என்று பாடியுள்ளார். இத் தேவாரம் வருமாறு.

திருச்சிற்றம்பலம்

பண்: நட்டபாடை திருமுறை: 01ஆம் திருமுறை

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுகன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம் பிணை யணையும் பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார் வினையிலரே.

திருச்சிற்றம்பலம்

தொடர்ந்து எம்பெருமான் திருவடிகளைப்பற்றிய பதிகங்களைத் தர முருகன் அருளை வேண்டி விடைபெறுகின்றேன். (தொடரும்...

**சீர்திருத்தப் பணி செய்யும் மோகனதாஸ் சுவாமிகள்!**

*சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்களுடன்*
*சீர்திருத்தப் பணி செய்யும் மோகனதாஸ் சுவாமிகளே!*
*உந்தனை வாழ்த்துவதில் உவகையே கொள்ளுகின்றோம்*
*ஊர் போற்றப் பார் மகிழப் பல்லாண்டு வாழியவே!*
*கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் களிப்புடனே*
*அன்னப்பணி புரியும் நல்ல சாதனைத் தமிழனே!*
*வந்தனை செய்கின்றோம் எங்கள் சந்நிதி முருகனையே!*
*வாழியவே பல்லாண்டு நலமுடன் வாழியவே!*

*-இராசையா ஸ்ரீதரன்-*

*ஒருநொடிப்பொழுது செயல்திறன் நின்றாலும் பல நாள்களின் முன்னேற்றம் தடைப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை சிந்தனை என்றும் வேண்டும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

செல்வம் கொழிக்கும் வீட்டில் பிறந்தது அக் குழந்தை. உணவு உண்ண மறுத்து, தாயைப் பாடாய்ப்படுத்துகின்றது. தாயோ ஒரு தங்கக் கிண்ணத்தை எடுத்து அதில் சாதத்தையிட்டு பிசைந்து கதை எல்லாம் சொல்லி அக் குழந்தைக்கு அன்னம் ஊட்டுகின்றாள். ஓரிரு கவளம் உண்ட குழந்தை தானே அந்த சாதத்தை சாப்பிடுவதாகவும் தனக்கு ஊட்ட வேண்டாம் எனவும் அடம்பிடித்தது.

அதன் பிடிவாதத்திற்கு ஈடுகொடுக்க முடியாத தாய் மனமில்லாது அந்தத் தங்கக் கிண்ணத்தோடு சாதத்தை அக் குழந்தையின் கையில் கொடுக்கின்றார். பின்னர் எங்கே அந்தக் குழந்தை கிண்ணத்தை கீழே போட்டுவிடுமோ அதிலிருக்கும் சாதமும் கீழே விழுந்து சிதறிவிடுமோ என்ற ஐயத்துடன் மனம் பதற குழந்தையின் பின்னே செல்கின்றாள்.

இதேபோன்றுதான் இறைவன் நிலையும். அவனும் எம்மை எல்லாம் சிருஷ்டித்த பின் எங்கே உலகில் பக்தி உருவாகாமல் சிதறி தனது படைப்பு சிதறி விடுமோ எனப் பதறுகின்றான்.

குயவன் செய்த மட்பாண்டம் கீழே விழுந்துடைந்தால்கூட அதன் உடைந்த சிறு துண்டால் தண்ணீரை முகந்து குடிக்கலாம். ஆனால் பிரமன் படைத்த எமது உடம்பாகிய பாத்திரம் உடைந்தால் அது எதற்கும் பயன்படாமல் போய்விடும். அதனால்தான் இறைவன் பரிதவிக்கின்றான். மனிதப்பிறவி என்னும் பாண்டம் பக்தியால் நிரம்ப வேண்டும். அது ஆன்மாவை மேன்மையுற, பக்குவம் அடையச் செய்யவேண்டும். இதன் காரணமாகவே இறைவன் நம் பின்னாலேயே திரிகின்றான்.

"புறம் புறம் திரிந்த செல்வனாக" எம் பின்னே ஓடோடி வருகின்றான், நாம்தான் அவனைப் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றோம்.

எம்மை விடுங்கள், ஒருமுறை தாருகாவனத்து முனிவர்களுக்கே இறைவனைப் பற்றி சந்தேகம் வந்துவிட்டதென்றால் பாருங்களேன்! நாம் எம்மாத்திரம்!

முனிவர்கள் ஒருபோது நினைக்கிறார்கள், வேதம் ஓதி, வேள்வி பல நடத்தி, தவம் இருந்து, சித்திகள் பலவும் பெற்றிட்ட எம்மைவிட, இறைவன் எந்த விதத்தில் பெரியவன் என்று இறுமாப்புக்கொண்டனர். தாருகாவனத்தே ஆச்சிரமங்கள் அமைத்து தம் பத்தினிமாருடன் வாழ்ந்திருந்து அறிவொளி பெற்றிடவேண்டிய நேரத்திலே, இவர்களுக்கு அகந்தை பிறந்தது. கர்வம் கண்களை மறைத்தது. கற்பிலும், அழகிலும் தம்மைவிட யாருளர்? என்ற கர்வம் முனிவர்களின் பத்தினிமாருக்கும் தோன்றவே, இவர்களும் தவறான வழியில் சிந்திக்கலாயினர்.

முனிவர்கள் தமது தவ வலிமையாலும் ரிஷி பத்தினிகள் தமது கற்பின் ஆற்றலாலும் இறைவன் துணையின்றி தாம் எதையும் சாதிக்கலாம் என்ற கர்வநிலை கொண்டனர். இது மாயை.

*இன்று சாதாரணமானவை என்று கருதப்பெறுபவை அனைத்தும் உயர்ந்தவைகளேயாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோன நிலையிலும், முக்காலத்தையும் உணரும் இறைவன், இவர்கட்கு நல்ல பாடம் புகட்ட எண்ணினார்.

உடனே தாம் அழகான பிச்சாடண மூர்த்தம் கொண்டு பூத கணங்களுடன் தாருகாவனத்துக்கு வருகை தந்தார். திருமாலும் மோகினி வடிவமெடுத்து உடன் வந்தார். முனிவர்கள் மோகினியின் அழகில் மயங்கி தம் தவவலிமையும் ஆற்றலும் துறந்து அவர்கள் பின் அணிவகுத்தனர்.

இவர்கட்குத் தமது தவறை உணர நீண்டகாலம் எடுத்தது. தம் நிலை உணர்ந்ததும், இவர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்ததோடு, இறைவன்மேல் சீற்றம் கொண்டு நம்மால் முடியாதது எதுவுமே இல்லை, நமது தவ வலிமையால் அந்தப் பரமன்மீதே படை எடுப்போம் எனக்கூறி அபிசார வேள்வி ஒன்றை இறைவனுக்கு எதிராக ஆற்றத் தொடங்கினார்கள்.

அந்த வேள்வித் தீயில் உருவாகிய அக்கினி, மான், மழு, பாம்பு, புலி, முயலகன் ஆகியவற்றை இறைவனைத் தாக்கிட ஏவினர்.

இறைவனுக்கு இது ஒரு விளையாட்டாகத் தோன்றியது. தன்னை நோக்கி வந்த மானையும் மழுவையும் இறைவன் தனது திருக்கரங்களில் ஏந்தினார். பாம்பினை மாலையாக அணிந்தார். புலியைக்கொன்று அதன் தோலை ஆடையாக உடுத்தினார். தீயைக் கையில் எடுத்துக்கொண்டார். முயலகனைத் தன் குஞ்சித பாதத்தால் மிதித்தார்.

இதனை எல்லாம் எதிர்பாராத தாருகாவனத்து முனிவர்கள் பெரிய யானை ஒன்றை ஈசன்மேல் ஏவினர். இறைவன் அதனுள்ளே தான் புகுந்து அதனைக் கிழித்து வெளியே வந்து யானைத் தோலைப் போர்த்தருளினார் என்பது வரலாறு.

"கடிதென வந்த கரிதனை உரித்து அவ்வுரி மேனி மேல் போர்ப்பார்". யானையின் உடலையும் தோலையும் போர்த்து எம்பெருமான் தாண்டவம் ஆடிய தலம் தமிழ்நாட்டிலே வழுவூர் என அழைக்கப்படுகின்றது. இச்சம்பவம் சிவபிரானுடைய அட்டவீரட்டானங்களில் ஒன்றாகும்.

எனவே இறைவனை மறந்தால் இன்னல்களை எதிர்நோக்க வேண்டிவரும். நாம் இறை சிந்தனையை வளர்ப்போம். கடவுள் பயமே ஞானத்தின் ஆரம்பம்.

---

## கைகூப்பி வணக்கம் செலுத்துகிறோம் ஏன்?

*ஒருவர் நம்மிடம் அறிமுகமாகும்பொழுது அவரை கைகூப்பி வணக்கம் செலுத்தி வரவேற்பது வழக்கம்.*

*நம்முடைய பெரும்பாலான மக்களிடம் இது பழக்கமாக இருந்தாலும் மற்றவர் களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக அமைகிறது. இது மட்டுமல்லாமல் இதனுள் ஒரு அதிசயம் மறைந்திருக்கிறது.*

*நாம் இரு கையை கூப்பி வணக்கம் செலுத்தும்போது நம்முடைய விரல்கள் பத்தும் ஒன்றாகின்றன. இது நம் உடம்பில் இருக்கும் காது, கண், மூளையின் உணர்ச்சி புள்ளிகளைத் தூண்டுகின்றன. அதனால் நாம் ஒருவரை காணும்போது கைகூப்பி வரவேற்பது அவர்களை அதிக அளவில் நினைவில் வைத்துக்கொள்ள உதவுகிறது. இதனை நீங்கள் அனைத்து இடங்களிலும் செய்வது மற்றவர்களிடத்தில் மரியாதையை ஏற்படுத்தும்.*

*எனக்கு எல்லாம் தெரியும் என்ற முடிவே அறியாமையின் முகடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர் (தொடர்ச்சி...)

**— திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்** அவர்கள் —

## மாணிக்கவாசகப் பெருமான்

திருவாதவூரிலே சம்புபாதாசிரியர், சிவஞானவதி தம்பதிகளுக்கு மகனாக அவதரித்தவர் மாணிக்கவாசகர். பெற்றோர் இட்ட பெயர் திருவாதவூரர்.

மந்திரிப்பதவி வகித்த அவர் உலகத்தின் துன்ப துயரங்கள் எல்லாவற்றையும் ஊன்றிக் கவனித்து, இந்த வில்லங்கங்களிலிருந்து விடுபட வழி என்ன? வழிகாட்டும் குரு யார்? அவர் எங்கிருக்கிறார் எனத் தவித்தார். தாய்ப் பசுவைத் தேடும் கன்றினைப்போல் தவித்தார்.

மன்னன் குதிரைகள் வாங்குவதற்காக இவரை திருப்பெருந்துறைக்கு அனுப்பினார். திருப்பெருந்துறையிலே சிவபெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பெற்றார். அடியார் நடுவில் அருள்மயமான சிவபெருமான் குருவடிவில் இருந்தார். "குறைதீர்க்க வந்த குருமூர்த்தி இவர் என உள்ளம் நெகிழ்ந்து வணங்கினார். "ஆன்ம நாயகா! அடியேனை அடிமை கொள்ளுங்கள்" என வேண்டினார். "வாதவூரா! வருந்தாதே. உன்னை ஆட்கொள்ளவே இங்கு வந்தோம்" என அவரை உற்றுநோக்கி அவர் தலைமேல் தன் திருவடிகளைப் பதித்தார். உண்மைப் பொருளாம் சிவபோதம் உபதேசித்தார். வாதவூரர் தம்வசமிழந்தார். விவரிக்கமுடியாத பரவசத்தில் மூழ்கினார். வேதங்களிலும், ஆகமங்களிலும் உள்ள நுட்பங்களை விளக்கி உபதேசித்தார் ஸ்வாமி. குருநாதரின் அருள்மொழி அமிர்தமாகத் தித்தித்தது. உள்ளத்தில் புதிய ஒளிபிறந்தது. சரஸ்வதி அவர் நாவில் தங்கினாள். "நமசிவாய வாழ்க..." எனும் முதலடியுடன் அவர் சிவபுராணம் பாடத் தொடங்கினார்.

தனக்குள்ளே தானாகி நீக்கமற நிறைந்திருக்கும் பெருமானை, "என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" எனப் பாடுகிறார். அனைத்துள்ளேயும் இறைவனைப் பார்க்கும் அளவிற்கு அவர் மனம் அத்வைத நெறியிலே செம்மையுற்று மிளிர்கிறது.

மாணிக்கமயமான சொற்களை வரிசைப்படுத்தி அன்புக் கயிற்றில் கோத்தமாலையை சூட்டிய திருவாதவூரரை குதூகலத்துடன் நோக்கினார். "அன்பனே! இன்றுமுதல் உலகம் உன்னை மாணிக்கவாசகன் என அழைக்கட்டும்" என்றருளினார் ஸ்வாமி.

அமைச்சுப் பதவியைத் துறந்து, தவக்கோலம் ஏற்ற மாணிக்கவாசகர், மதுரை, ஆலவாய் அண்ணலைத் தரிசித்து, திருப்பெருந்துறையடைந்தார். அங்கே இறைவன் காட்சி கொடுத்து "மாணிக்கவாசகர்! இன்னும் பல தலங்களைத் தரிசித்து, உள்ளத்தை அள்ளும்

*ஒருவருக்கொருவர் மாறிக் கவலைப்பட்டாலே புதிய சமுதாயம் தோன்றிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகப் பாடல்களைப் பாடு! முடிவில் தில்லைக்குவா! என்று கூறி மறைந்தார். குருவைப் பிரிந்த பின் பிரிவு ஆற்றாது திருவருள் சுரந்து பக்திப் பிரவாகம் பெருக்கெடுக்க திருவாசகமெனும் பெருவாசகமாகிய தேனை அழுதழுது பாடினார். "அம்மையே அப்பா... பால் நினைந்தூட்டும் தாயினும்... மெய் தானரும்பி... போற்றியென் வாழ்முதலாகிய பொருளே என அழுதழுது பாடி அரன் கழல் சேர்ந்தவர் மாணிக்கவாசகர். பல தலங்களைத் தரிசித்து திருவண்ணாமலையில் திருவெம்பாவை, திருவம்மானை ஆகியன பாடினார்.

தனக்குள்ளே தானாகி நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை, "என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" எனப் பாடுகிறார். தன்னுள் தலைவன் தாள் கண்டார். தில்லை அம்பலக் கூத்தனை தரிசித்து அங்கே ஒரு சோலையில் தவமிருந்தார். அப்போது புத்த துறவிகள் அவரிடம் வாதம் செய்து தோல்வியடைந்தனர்.

ஒருநாள் வேதியர் ஒருவர் அவரைத் தேடி வந்தார். நீங்கள் எழுதிய திருவாசகத்தை ஏட்டில் எழுத வேண்டும் என்றார். பரமனின் பிரபாவத்தை மறுபடியும் பாடுவது பெரும் புண்ணியமல்லவா என்று திருவாசகத்தைப் பாடினார். வேதியர் அவற்றை விரைந்து எழுதினார். "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என வேதியர் சொல்ல மணிவாசகர் திருக்கோவையார் பாடினார். எழுதி முடிந்ததும் வேதியர் மறைந்தார். திடுக்கிட்டு எழுந்த மாணிக்கவாசகர் வேதியரைத் தேடினார். "தில்லையில் ஆடும் திருக்கூத்தனின் லீலை இது" என உணர்ந்தார். ஆனந்தக் கண்ணீர் அவர் உடம்பை அபிஷேகம் செய்தது. திருவாதவூரர் திருவாய் மலர்ந்தருள அழகிய திருச்சிற்றம்பலவர் கையெழுத்து" என எழுதிய இனிய பாடல்கள் அடங்கிய ஓலைச்சுவடி தில்லைவாழ் அந்தணர்கள் கையில் கிடைத்தது. அவர்கள் மணிவாசகரிடம் நடந்ததைச் சொல்லி "திருவாசகத்தின் பொருளை இனிது உரையுங்கள்" என்றனர். அன்று ஆனி மகம். "இதுதான் பொருள்" என சிற்சபேசரான நடராஜரைச் சுட்டிக்காட்டியபடியே ஸ்வாமியை நெருங்கினார். பெரும் ஒளி வெள்ளம் எழுந்தது. அதனுள் புகுந்தார் மணிவாசகர். இறைவனோடு இரண்டறக் கலந்தார். தனது 32ஆவது வயதில் சாயுச்சியமுத்தி அடைந்தார்.

ஆனந்தப் பரவசத்தில் நான் மட்டும் உலகப்பற்றில் உழல்வது முறையோ என்றும் நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம் இன்னும் தொடர்ந்து சிவனாரைப்பாடி உருகி உலக மக்களாகிய எம்மையும் அவ்வழி நாட வழிகாட்டியவர் மாணிக்கவாசக சுவாமிகள்.

சமய குரவர் நால்வரில் ஞானநெறி நின்றொழுகி வாழ்ந்து காட்டியவர். மணிபோன்ற சொற்களால் மனமுருகி சிவனைப் பாடிப் பரவியதால் மாணிக்கவாசகர் என எம்பெருமானா லேயே அழைக்கப்பெற்றவர்.

இவரது பக்தி வரலாற்றை திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருவுத்தரகோச மங்கைப் புராணம் என்பவற்றில் காணலாம். இவர் அழுது அழுது அரனடி சேர்ந்தவர். இவர் பாடிய பாடல்களெல்லாம் ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி உலப்பிலா ஆனந்தம் தருபவை.

*வாழத் தெரியாதவர்களுக்குச் செய்யப்படும் உதவி பாழுக்கிறைத்ததாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனை வந்துறு மாறே.

மனிதன் கடவுளை நினைந்து உருகி அழுதால் உருப்பட்டு விடுவான். அழுதால் இறைவன் அருளைப் பெறலாம். உடற் பிணிக்குத் தேன் மருந்தாவதுபோல், உயிர்ப் பிணிக்குத் திருவாசகம் மருந்தாகும். மாணிக்கவாசகர் எனும் தேனீ இறைவன் திருவடி மலர்களிலமர்ந்து எடுத்த தேன் திருவாசகமாகும். நெஞ்சக் கனகல் நெகிழ்ந்து உருகி தினந்தோறும் திருவாசகத்தை ஓதிவரவேண்டும்.

இவர் பாடியருளிய திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார். திருவாசகம் எனும் தேன் உலகப் புகழ்மிக்கது. இதன் பெருமையறிந்த போப்பையர் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்த சிறப்பிற்குரியது. காலம், இடம், மொழி, மதம் என்பன கடந்த சிறப்பின் சிகரத்தையுடையது.

மாணிக்கவாசகர் நடராஜர் அருளால் ஊமைப் பெண்ணைப் பேசவும், பாடவும் வைத்தார் சிதம்பரத்தில் வியாக்ரபாதரின் மகன் பாலுக்காக அழுதபோது பாற்கடலையே தில்லைக்கு வரவழைத்தார் அம்பலவாணர். சேக்கிழார் அறுபத்துமூவர் வரலாற்றைப் பெரியபுராணமாக எழுத நடராஜரிடம் வேண்டியபோது இறைவனே "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தார். பின் சேக்கிழார் பெரியபுராணத்தை எழுதி முடித்து, அதை சிதம்பரம் ஆயிரம்கால் மண்டபத்தில் அரங்கேற்றினார்.

எம்பெருமான் அடியார்களுக்காக அருள்புரிந்த திருவிளையாடல்கள்தான் எத்தனை! எத்தனை! மாணிக்கவாசகப் பெருமானை தானே வலியவந்து தடுத்தாட்கொண்டு; அவருக்காக நரியைப் பரியாக்கி, பரியை நரியாக்கி, வைகையைப் பெருக்கெடுக்க வைத்து, கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்து, பிரம்படி பட்டு மணிவாசகரின் பெருமையை உலகுக்கு அறிய வைத்தார். அடியவர்களுக்காக இரங்கிவந்து அருள்புரியும் கருணைக்கடலல்லவா எம்பெருமான்.

வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் மகாபாரதம் எழுதியதுபோல, மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல ஆதியும், அந்தமுமில்லாத சிவபெருமான் தன் திருக்கரங்களால் எழுதிய ஞானப் பொக்கிஷம் திருவாசகம் "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என மாணிக்கவாசகரும் தங்குதடையின்றி திருச்சிற்றம்பலக்கோவை பாடினார். அதையும் இறைவன் எழுதி, "மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியது" எனக் கைச்சாத்திட்டு சிற்சபையில் பஞ்சாட்சரப்படியில் வைத்து எவரும் காணாதவாறு மறைந்தருளினார். மறுநாள் தில்லைவாழ் அந்தணர்கள் அந்தக் கோவையைக் கண்டு அதன் கையொப்பத்தைப் பார்த்து விளங்காமல் மாணிக்கவாசகரிடம் கேட்க இவரே பொருள் எனக்காட்டி அம்பலக்கூத்தன் சிலையுடன் இரண்டறக் கலந்தார். ஓம், ஓம் என மணிகள் ஒலித்தன.

*உழைத்துப் பெறாத செல்வம் அருமையாகக் கருதப்பெறமாட்டாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதற் பொருளாம் தில்லைக் கூத்தன், சிவபெருமானிடம் பக்தி மேலீட்டால் உருகியும், அழுதும், அரற்றியும், பிரிவுத்துயர் தாங்காது பாடிய அருமருந்தான தித்திக்கும் தீந்தமிழ்த் திருவாசகத்தை நாம் ஓதி திருவாசகத்தின் உட்பொருளான தில்லை நடராஜப் பெருமான் திருநடனமிடும் ஆனந்தத் தாண்டவத்தை தரிசித்து, எம்பெருமானின் திருவருளைப் பெறுவோமாக.

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி.

(தொடரும்...

**இறைவனே பஞ்சபூதமாகும்**
**பஞ்சபூதமே இறைவனாவான்**

*நிலத்திலோர் சிறுதுண்டைப் பிறருக்கு விற்பவர்கள்*
*நிலமதனைத் தாமேதான் படைத்தோமென்று எண்ணுமட்டும்*
*நிலம்நடுங்கி நீரழிவு ஏற்படத்தான் செய்யும்*
*நிலமே இறைவனது பாதமென்று உணராவிடில்!*

*நீரிலோர் சிறிதளவை போத்தலிட்டு விற்பவர்கள்*
*நீரதனைத் தாமேதான் படைத்தோமென்று எண்ணுமட்டும்*
*நீர்பெருகி நிலத்தழிவு ஏற்படத்தான் செய்யும்*
*நீரே இறைவனது இடுப்பென்று உணராவிடில்!*

*தீக்குச்சைப் பெட்டியிலே அடைத்தடைத்து விற்பவர்கள்*
*தீயதனைத் தாமேதான் படைத்தோமென்று எண்ணுமட்டும்*
*தீபரவித் தேகத்தை அழித்திடத்தான் செய்யும்*
*தீயே இறைவனது வயிறென்று உணராவிடில்!*

*காற்றதனை விசிறுதற்கோர் விசிறிசெய்து விற்பவர்கள்*
*காற்றதனைத் தாமேதான் படைத்தோமென்று எண்ணுமட்டும்*
*காற்றே புயலாகி உலகை அழித்திடத்தான் செய்யும்*
*காற்றே இறைவனது நெஞ்சென்று உணராவிடில்!*

*ஆகாய ஆய்வுகூடம் அமைத்துச் செயற்படுவோர்*
*ஆகாயமதனைத் தாமேதான் படைத்தோமென்று எண்ணுமட்டும்*
*ஆகாயக் கோவம் உலகை அழித்திடத்தான் செய்யும்*
*ஆகாயமே இறைவனது சிரசென்று உணராவிடில்!*

***-திரு மணியம்-***

*உற்பத்தியோடு தொடர்பில்லாத எதுவும் புண்ணியமான கடமையாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியங்களைப் பின்பற்றாத வாழ்வு துன்பமே

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

விழுமியம் என்பது தனிநபர், சமூகம், வாழ்க்கை என்பவற்றை போஷிக்கின்ற, வளப்படுத்துகின்ற, அர்த்தமுள்ளதாக்குகின்ற மனித குணப்பண்பாகும். உலகம் முழுக்க அறநெறிகள், நீதிகள், ஆசாரங்கள் உள்ளன. அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக சுட்டக்கூடிய சொல்லே விழுமியமாகும். மனிதனது நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படும். சோக்கிரடீஸ் என்ற மெய்யியலாளர் "விழுமியங்களை ஒழுக்கத்துடன் இணைத்து அதுவே அறிவு என்றார். அதாவது அறிவே ஒழுக்கம்" என்றார். சுருங்கக் கூறின், நல்ல பழக்க வழக்கங்கள் விழுமியமாகும். விழுமியம் என்ற சொல்லில் அன்பு, தைரியம், உண்மை, சாந்தம், சமாதானம், அறிவு காருண்யம், கெட்டித்தனம், சுயகற்றல், அகிம்சை, ஒழுங்குமுறை, சமத்துவம், இன்சொல், நேர்மை, சினேகபூர்வம், தர்மம், வாய்மை, இரக்கம், சத்தியம், கருணை, மனிதநேயம் ஆகிய நடத்தைகளும், குணங்களும் அடங்கியுள்ளன. விழுமியம் என்பதுள் எமது முன்னோர்களின் உச்ச அனுபவங்களினால் செம்மைப்படுத்தப்பட்ட நம்பிக்கைகள், மரபுகள், சிறந்த பழக்கவழக்கங்கள், ஒழுகலாறு என்பவை அடங்கியுள்ளன.

விழுமியங்களை நேர்மையுடன் பயன்படுத்துவதே அவற்றின் தொடர்ச்சியை உறுதிப் படுத்துகின்றது. விழுமியங்களை இருவகையாக வகுக்கலாம். தனிமனித விழுமியங்கள், பண்பாட்டு விழுமியங்கள். தனிமனித விழுமியங்கள் தனிமனிதருடைய வாழ்வை ஒழுங்கமைப் பதை நோக்கமாகக் கொண்டவை. அவை ஒட்டுமொத்த சமுதாயத்தின் ஒழுங்கமைவுக்கு அத்தியாவசியமாக இருக்கவேண்டியதில்லை. ஒரு சமூகத்தில் பொதுவாக உள்ள விழுமியங் கள் பண்பாட்டு விழுமியங்கள் எனலாம். மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கு எந்தெந்த விழுமியங்கள் சிறப்பாகத் தேவைப்படுகின்றனவோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனலாம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்குள்ளும் தனி மனித விழுமியங்கள் இருக்க வேண்டும். குழந்தைப் பருவத்தில் கற்ற விழுமியமானது அக்குழந்தை பாடசாலையிலும் விழுமியக் கல்வியைத் தொடர்வதற்கு உதவி புரிகின்றது. பொதுவாக விழுமியங்கள் உயர்ந்த சமூக உருவாக்கத்துக்கு மிகவும் அவசியம். ஆனால் தற்பொழுது பெரும்பாலான பெற்றோர்கள் பணத்துக்காகவே திரிகிறார்கள். தன் பிள்ளைகள் பெரிய பதவிகளைப் பெற்று சிறப்பாக பணம் சம்பாதிப்பதையே விரும்புகின்றனர். பெற்றோர் விழுமியங்களை போதிப்பதில், பிள்ளைகள் பின்பற்றுகிறார்களா என்பதில் அக்கறை செலுத்துவது குறைவு. இதனால் நல்ல மனித வளங்களை பெரிதும் காணமுடியாதுள்ளது. இவை இல்லையாயின் செத்துப்போன சமூகத்தையே காணலாம்.

நாம் எமது அன்றாட வாழ்வில் விழுமியங்களைக் கைக்கொண்டு மகிழ்வான வாழ்வை வாழவேண்டும். தனிமனித விழுமியங்கள் சீராக அமையின் சமூக விழுமியங்கள் சீராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். மனிதர்கள் ஒருங்கிணைந்து வாழ்வதற்கும், சமூகம் நிலைத்து நிற்பதற்கும் சமூக விழுமியங்கள் வழிகாட்டுகின்றன. இவற்றை சிறந்த முறையில் பின்பற்றுவதன்மூலம் மனித வாழ்வின் துன்பியல் நிலையிலிருந்து விடுபட முடியும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் ஆகிய பழமொழிகளுக்கு அமைவாக குழந்தைகள் எதிர்காலத்தில் சிறந்து விளங்க நல்ல விழுமியப் பண்புகளை இளம் வயதிலேயே கற்றுக்கொடுக்க வேண்டும். கற்கவேண்டும். புராணங்கள், இதிகாசங்கள், பழமொழிகள், நீதிக்கதைகள், சமய நூல்கள் என்பவற்றிலும் நல்ல விழுமியப் பண்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. மேலும் பெற்றோர், பண்புள்ள நண்பர்கள், சமயத் தலைவர்கள், அதிபர், ஆசிரியர்கள் மூலமாகவும் சிறந்த விழுமியப் பண்புகள் விதைக்கப்படுகின்றன. ஆனால் அவற்றை முளையிலேயே கிள்ளிவிடுவோரும் உள்ளனர். இதனால் இவர்களது வாழ்வு துன்பமாகவே ஓடுகின்றது.

விழுமியங்கள் ஒழுங்காகப் பின்பற்றப்படுவதன்மூலம் சமூகத்தில் களவு, துர்நடத்தைகள், வன்புணர்வுகள், ஏமாற்றங்கள், சமூகச்சீரழிவுகள், வீதி ஒழுங்குகளைப் பின்பற்றாமை, சூழலை மாசுபடுத்தல், பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், பெரியோரை மதிக்காமை, அமைதியைக் குலைத்தல், சட்டத்தை மதிக்காமை, கடமை தவறுதல் என்பவற்றிலிருந்து விடுபடமுடியும். இவை எமக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் நன்மை பயக்கும். ஆப்பிரகாம்லிங்கன் கூறியதுபோன்று "ஒரு மனிதன் எந்த அளவுக்குத் தான் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமென மனதில் தீர்மானித்துக்கொள்கிறானோ அந்த அளவுக்குத்தான் அவனால் மகிழ்ச்சியாக வாழமுடியும்". சகல நிறைவும் பெற்றவராக ஒருவர் வாழ வேண்டுமாயின் விழுமியப்பண்புகளைக் கொண்டவராக அவர் விளங்க வேண்டும் என்பதில் மாற்றம் இல்லை. அன்பு என்ற விழுமியப் பண்பைப் பொறுத்தமட்டில், இவை மனிதனைப் பண்படுத்தவேயன்றி புண்படுத்த அல்ல. அன்பில்லாத உள்ளத்தில் பகை அடைந்து கிடக்கும். அன்பு புனிதமானது. பொறுமை உள்ளது. சாந்தமுள்ளது. இழிவானதைச் செய்யாது. தன்னலம் இல்லாதது. இதுதான் அன்பின் சிறப்பு. ஆனால் இன்று எதிர்பார்க்கும் அன்பு இழிவான அன்பு என பல்வேறு வடிவங்களில் இவ் அன்பானது மாசுபடுத்தப்படுகின்றது. மாசுக்குள் அகப்பட்டவர் வாழ்வு துன்பமே.

ஒருவன் நேர்வழியில் மன்னிக்கும் பண்புகொண்ட விழுமியப் பண்புடன் வாழ வேண்டும். ஆனால் இந்த அரிய குணம் இன்று அருகி வருகின்றது. அருகி வருவதால் சிறிய பிரச்சனைகள் கூட பெரிதாகி பூதாகரமாகி நிற்கின்றன. மன்னிக்கும் பண்பு தெய்வ அம்சம் பொருந்தியது. எனவே இந்த விழுமியத்தைப் பின்பற்றுவதன்மூலம் அவன் சமூகத்தில் உயர்வடைகின்றான். மதிக்கப்படுகின்றான். இது இல்லாத சிலர் இன்று சமூகத்தில் மிதிக்கப்படுகின்றனர். வாழ்வில் மனிதநேயம் மிக முக்கியமானதாகும். இதன்மூலம் ஒருவன் அன்பு, பாசம், ஆரோக்கியம், நட்பு, மதிப்பு என்பவற்றை அடைந்துகொள்கின்றான். மனிதநேயத்தை வளர்க்கும் பொறுப்பு பெற்றோரையே சாரும். ஒவ்வொரு குடும்பமும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். இதன் விழுமியத்தை விதைக்கத் தவறிய பெற்றோர் தமது முதுமைக் காலத்தில்

*பணம் கொடுப்பதைவிட பணத்தை சம்பாதிப்பவனாக ஆக்குதல் உயரிய பணி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பாதிப்பை அனுபவித்து வருகிறார்கள். பெற்றோரை மதித்தல், பெற்றோர் தமக்கிடையே ஒழுங்காக இருத்தல், விருந்தினரை உபசரித்தல், இறை வழிபாடு, உறவினர்கள், சகோதரர்கள் மீது அன்பு காட்டுதல், முதியோரை மதித்தல் போன்ற நாளாந்தம் வீட்டில் நிகழும் பணிகள் சிறப்பாக இருக்க வேண்டும். வீட்டில் பின்பற்றப்படும் விழுமியங்கள் பிள்ளைகள்மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறதென்பதில் பெற்றோர்களது கவனிப்புகள் தீவிரமாக இருத்தல் வேண்டும். குறைந்த கவனிப்புகள் உள்ள பிள்ளைகளது நெறிபிறழ்வுக்கு அவர்களது பெற்றோரே பொறுப்பு.

பாடசாலைக்கு எனவும் விழுமியங்கள் உள்ளன. பாடசாலையின் ஒழுங்கு விதி முறைகளை மதித்தல், நேரம் தவறாமை, அமைதி பேணுதல், அதிபர் ஆசிரியர்களை மதித்தல், பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்ற விழுமியங்களை சிறு வயதுமுதலே கடைப்பிடிப்பின் மாணவப் பராயத்தில் மட்டுமன்றி தமது வாழ்விலும் பிரயோகிக்க முடியும். எனவே விழுமியங்கள் பின்பற்றப்படுவதன்மூலம் நேர்மனப்பாங்கு, உடல், உள ஆரோக்கியம், சமூகமயப்படுத்தப்பட்ட நடத்தைகள், மனிதநேயப் பண்புகள், தன்னம்பிக்கை, தொடர்பாடல் திறன், மற்றவர்களை மதிக்கும் பண்பு என்பவற்றைக்கொண்ட சமூகத்தால் ஏற்கக்கூடிய வாழ்வு வாழமுடியும். விழுமியங்களை வாழ்வில் நழுவவிட்ட பலரது வாழ்வு துன்பம் நிரம்பியதாக மாறியுள்ளது. உன் வலியை நீ உணர்ந்தால் உயிரோடு இருக்கிறாய் என்று அர்த்தம். பிறர் வலியை நீ உணர்ந்தால் மனிதனாய் இருக்கிறாய் என்று அர்த்தம். நீ எதிர்பார்த்ததுபோல் வாழ்க்கை இல்லையா? கவலை வேண்டாம். நீ நினைத்தபடி மாற்ற முடியும். விழுமியங்களை கைப்பிடித்துச் சென்றால் மாத்திரமே.

---

## மதுரகவிக்கு "பசுபதிச்செல்வன்" விருது

புலோலி பர்வதவத்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் (பருத்தித்துறை சிவன் கோவில்) கும்பாபிஷேக பெருவிழாவில் "பசுபதிச்செல்வன்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அருள்மிகு ஶ்ரீ பர்வதவத்தனி அம்பாள் வாசல் நூதன திரிதன இராஜகோபுர மகா கும்பாபிஷேகப் பெருவிழா கடந்த 17.03.2025 திங்கட்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது.



கும்பாபிஷேக பெருவிழாவில் சைவத்துக் காகவும் தமிழுக்காகவும் தன்னை அர்ப்பணித்து ஆன்மீகத் துறையில் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆலய கும்பாபிஷேக மகோற்சவ பெருவிழாக்களை தன் சின்மக் குரலால் தெய்வீக பேருரைகளையும், நேரடி ஒளிபரப்புக்களையும், வர்ணனைகளையும் வழங்கி வரும் சர்வதேச ஒலிபரப்பாளர் சைவ சித்தாந்த பண்டிதர், செந்நாப்புலவர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் அவர்களுக்கு ஆலய தர்மகர்த்தா, சிவாச்சாரியார்கள், சைவமெய்யன்பர்கள் சார்பில் ஓம் தொலைக்காட்சியின் பிரதம வர்ணனையாளருக்கு பசுபதீஸ்வரர் சிவனது ஆசியோடு அவரது நாமச்சிறப்போடு "பசுபதிச்செல்வன்" எனும் சிறப்பு ஆன்மீக விருதை வழங்கிக் கௌரவித்தார்கள்.

*மதம் மக்களின் அன்றாட வாழ்க்கையில் அனுட்டானத்தில் இருந்தால் எப்போதும் அழியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு குமார் | கனடா | 7,24500. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கருணாகரன் அஜிதா, க. அஷ்ருதா, க. ஜனோஷன் | புலோலி (சுவிஸ்) | 200000. 00 |
| இ. சயந்தன் | நவுக்கிரி | 5000. 00 |
| திரு தர்மகுலசிங்கம் குடும்பம், லோ. தார்மிகன் | வட்டுக்கோட்டை | 20000. 00 |
| திரு அகிலன் குடும்பம் | கொழும்பு | 35000. 00 |
| இ. குணரட்ணம் | அச்சுவேலி | 5000. 00 |
| அ. அருள்ராஜன் | கைதடி | 5000. 00 |
| சி. செல்வேந்திரராஜா | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சந்தோஷ் நகை மாடம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| தி. மீனா | ஈவினை | 1000. 00 |
| திரு பரமேஸ்வரன் குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| மே. நிரோத்தீபன் | அரியாலை | 5000. 00 |
| R. பிரவீனா, R. சாய்மித்திரா | தெல்லிப்பழை | 8000. 00 |
| ப. கணேசமூர்த்தி | கரணவாய் | 20000. 00 |
| த. மகேந்திரநாதன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| பி. கவின் | வவுனியா | 10000. 00 |
| சு. செல்லத்துரை குடும்பம் | சங்குவேலி | 42000. 00 |
| இ. சிவனேஸ்வரன் | கோப்பாய் | 20000. 00 |
| இ. திருச்செந்தூரன் | முரசுமோட்டை | 6000. 00 |

ஒவ்வொருவரும் தம் ஆற்றல் முழுவதையும் உழைப்பாக மாற்றினால் வளம் பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இ. தயாபரன் | முரசுமோட்டை | 6000. 00 |
| கா. நந்தகுமார் | முரசுமோட்டை | 1500. 00 |
| வே. சிவானந்தநாதன் | உரும்பராய் | 1500. 00 |
| க. ஜெகதீஸ்வரன் | ஜேர்மன் | 50000. 00 |
| வை. ராஜா | கொழும்பு | 5000. 00 |
| வைரவநாதன் நினைவாக | வத்தளை | 5000. 00 |
| செ. அட்ஷயன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| கு. ரத்தினசிங்கம் நினைவாக | வல்வெட்டித்துறை | 15000. 00 |
| சிவனேசன் கலைவாணி | யாழ்ப்பாணம் | 30000. 00 |
| வி. தவச்செல்வி | வரணி | 2000. 00 |
| R.V. ரத்னசிங்கம் | லண்டன் | 10000. 00 |
| இ. கமலநாதன் | கல்வியங்காடு | 5000. 00 |
| சி. நிமலன் | லண்டன் | 10 பவுன்ஸ் |
| கு. ஸ்கந்தபாபு | கரணவாய் | 5000. 00 |
| க. கேசிகன் | நவுக்கிரி | 2000. 00 |
| J. அட்ஷரன், J. கார்த்திகன் | கொழும்பு | 10000. 00 |
| திரு அன்பழகன் குடும்பம் | கனடா 250,000 ரூபா பெறுமதியான பொருட்கள் வகையில் | |
| நி. நிஜஷ்வின் | வல்வெட்டித்துறை | 1மூடை அரிசி |
| K. மாலினிதேவி | கொழும்பு | 5000. 00 |
| செ. வன்னியசிங்கம் | கச்சாய் | 5000. 00 |
| தா. குஞ்சு | கச்சாய் | 1000. 00 |
| சு. குலேந்திரன் | கோப்பாய் | 4000. 00 |
| வே. செல்வராஜா | கோண்டாவில் | 20000. 00 |
| சி. அறிவன் | வட்டுக்கோட்டை | 6500. 00 |
| P. பத்மரூபன் | கொக்குவில் | 3000. 00 |
| திரு கார்த்திகேயன் குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| S. சிவமாறன் | யாழ்ப்பாணம் | 20000. 00 |
| ம. வசீகரன் | சாவகச்சேரி | 10000. 00 |
| திரு சுரேசன் குடும்பம்<br>திரு சற்குருநாதன் குடும்பம்<br>திரு சதீஸ்குமார் | இணுவில் | மரக்கறி, 2மூடை அரிசி |
| திரு ராஜகுரு மூலம் இலங்கைநாதன் | குடும்பம் கனடா | 50000. 00 |
| சு. கிருஷ்திகா | அளவெட்டி | 1000. 00 |
| S. கிருபானந்தன் | லண்டன் | 5000. 00 |
| த. சாயகி | அச்சுவேலி | 20000. 00 |
| த. லாரணி | அச்சுவேலி | 30000. 00 |
| க. ஆனந்தரசா (இலங்கை வங்கி) | கரவெட்டி | 75000. 00 |
| N. நந்தகுமார் | தெல்லிப்பழை | 3000. 00 |

ஒவ்வொரு செயலுக்கும் அதற்குரிய பயனைக் கணக்கிடல் உழைப்பினை ஊக்குவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சா. சொர்ணவதி | வல்வெட்டித்துறை | 80கிலோ அரிசி |
| திருமதி ரா. சரஸ்வதி | ஆவரங்கால் | 10000. 00 |
| ஜெ. கிருபா, ஜெ. தனிஜா | லண்டன் | 10000. 00 |
| வி. கேஷா | லண்டன் | 10000. 00 |
| சி. நிலவன் | சுவிஸ்லண்ட் | 100000. 00 |
| M. பாலரதி | மானிப்பாய் | 1000. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | கனடா | 30000. 00 |
| வை. ஜெயச்சந்திரா | ஊரிக்காடு | 5000. 00 |
| இ. நித்தியராஜா, இ. பவானந்தராஜா | பருத்தித்துறை | 40000. 00 |
| செ. கமல்ராஜ் | நாகர்கோவில் | 3000. 00 |
| ம. பிரசாந் | இணுவில் | 5000. 00 |
| க. சௌந்தரநாயகி | வல்வெட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவாஞ்சனா நகை மாடம் | யாழ்ப்பாணம் | 3புட்டி அரிசி |
| V.M.K. நகை மாடம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| நியூ சரவணாஸ் பல்பொருள் வாணிபம் | யாழ்ப்பாணம் | 3கிலோ பருப்பு |
| சு. சுகந்தினி | மல்லாகம் | 5000. 00 |
| திரு ஜெயபாலா குடும்பம் | சுவிஸ் | 2000. 00 |
| திரு ஜெயமோகன் குடும்பம் | உரும்பராய் | மரக்கறி, தேங்காய், 2புட்டி அரிசி |
| பா. பிரதீபன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| K. சண்முகவேலாயுதம் | வவுனியா | 3000. 00 |
| திரு குணசிங்கம் குடும்பம் | கோண்டாவில் | 24000. 00 |
| ந. சிவதாசன் | அவுஸ்திரேலியா | 50000. 00 |
| பொ. பரமேஸ்வரி | கொழும்பு | 5000. 00 |
| ந. திருக்குமரன் | கொழும்பு | 5000. 00 |
| சி.வை. கந்தவனம் | கொழும்பு | 50000. 00 |
| வல்லமை சக்தி | கொழும்பு | 2000. 00 |
| திருமதி சுந்தரேஸ்வரன் | கொழும்பு | 5000. 00 |
| ச. பிருந்தா | அமெரிக்கா | 2000. 00 |
| K. காராலசிங்கம் | தெல்லிப்பழை | 5000. 00 |
| ச. ரஜனிகாந் | சரசாலை | 10000. 00 |
| ர. மாலதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திருமதி தனநாயகம் | சுன்னாகம் | 500. 00 |
| திருமதி V. மகேந்திரன் | பருத்தித்துறை | 2000. 00 |
| செ. செந்தில்குமரன் | இணுவில் | 2000. 00 |
| N. சரவணபவா | கந்தர்மடம் | 5000. 00 |
| சி.த. சிவகுமார் | காங்கேசந்துறை | 20000. 00 |
| R. சுமந்திரன் | உடுவில் | 20000. 00 |
| க. விவேகானந்தன் | கல்வியங்காடு | 3000. 00 |

உயிர்ப்பும் உணர்வும் செயலில் கலக்குமானால் வெற்றி உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ந. ஜெயதீபன் | கோண்டாவில் | 50000. 00 |
| பொ. நாயகம் | வளலாய் | 600. 00 |
| ம. கௌசிகன் | கொக்குவில் | 36000. 00 |
| திரு ரஞ்சனதாசன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| தே. துளசிதாசன் | ஆவரங்கால் | 50000. 00 |
| S. கிருபாநந்தினி | யாழ்ப்பாணம் (கற்பவதிகளுக்கான சத்துணவு) | 3000. 00 |
| அனு, அபி | பிரான்ஸ் | 2000. 00 |
| க. மயூரன் | கனடா | 5000. 00 |
| K. லக்ஷிகன் | அல்வாய் | 10000. 00 |
| M. தாசன் | சாவகச்சேரி | 5000. 00 |
| த. ராஜசிங்கம் | சாவகச்சேரி | 5000. 00 |
| சி. வருண் | இணுவில் | 100 டொலர் |
| ரா. அபிரன், ரா. அபினுகா | கோண்டாவில் | 5000. 00 |
| S. சஜீவன் | நல்லூர் | மரக்கறி, அரிசி |
| செ. சுருதிகா | புலோலி | 10000. 00 |
| S. சிவரஞ்சினி | வவுனியா | 500. 00 |
| சி. சாம்பவி | கோண்டாவில் | 1மூடை அரிசி |
| மா. சச்சிதானந்தன் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ர. ராகவன் | சுவிஸ் | 25000. 00 |
| வி. மாதினி | கொழும்பு | 5000. 00 |
| தி. பரமேஸ்வரன் | கொழும்பு | 10000. 00 |
| இ. தயாபரன் | இணுவில் | 5000. 00 |
| ச. கனீஷா | தெகிவளை | 5000. 00 |
| திரு ஞானச்சந்திரன் | வல்வெட்டித்துறை | 20000. 00 |
| சு. விசாகன் | அச்சுவேலி | 5000. 00 |
| க. பிரியதர்சன் | சுதுமலை | 2000. 00 |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | லண்டன் | 10000. 00 |
| ச. சுந்தரலிங்கம் | புத்தூர் | 1000. 00 |
| மகாலிங்கம் பாஸ்கரன் | பத்தமேனி | 100000. 00 |
| சி. சுகந்தி | கொக்குவில் | 5000. 00 |
| த. ஆயகி | கிளிநொச்சி | 3000. 00 |
| த. தேனுகன் | உரும்பராய் | 2000. 00 |
| பொ. தெய்வேந்திரம் | யாழ்ப்பாணம் | மரக்கறி, 12புட்டி அரிசி |
| நா. மகேஸ்வரநாதன் | வசாவிளான் | 2000. 00 |
| க. இராசேந்திரம் | நீர்வேலி | 10000. 00 |
| நா. சறோஜாதேவி | அளவெட்டி | 5000. 00 |
| T. ஜெகதாம்பாள் | அளவெட்டி | 1000. 00 |
| ச. கிருஷனா | அளவெட்டி | 1500. 00 |

(தொடரும்...

*கண்ணுக்கும் கருத்துக்கும் வராது மறைந்துகொண்டிருக்கும் பணிகளைத் தேடிச் செய்வதே பணி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருப்புகழைக் கற்றார் கரையேறுவார்

– திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் –



**(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் விளக்க உரைகளிலிருந்து தொகுப்பாக்கம் செய்யப்பெற்றது)**

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

**திருப்புகழ்**

**திருவேரகம் -சுவாமி மலை**

நிலவினிலே யிருந்து வகை மல ரே தெரிந்து
நிறை குழல் மீதணிந்து குழைதாவும்
நிகரறு வேலி னங்கள் வரிதர வாசகங்கள்
நினைவறவே மொழிந்து மதநூலின்
கலபம னோகரங்கள் அளவறவே புரிந்து
கனியிதழே யருந்தி யநுராகக்
கலவியிலே முயங்கி வனிதையர் பால்மயங்கு
கபடனை யாள வுன்ற னருள் கூராய்
உலகமொ ரேழுமண்ட ருலகமு மீசர் தங்கு
முயர் கயிலாய மும்பொன் வரைதானும்
உயிரொடு பூத மைந்து மொரு முதலாகி நின்ற
உமை யருளால் வளர்ந்த குமரேசா
குலைபடு சூர னங்க மழிபட வேலெறிந்த
குமரக டோர வேங்கண் மயில் வாழ்வே
கொடு முடியாய் வளர்ந்து புயனிலை போலுயர்ந்த
குருமலை மீதமர்ந்த பெருமாளே.

***பொழிப்புரை:***

ஏழு உலகங்களும், தேவருலகமும், சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கயிலாய மலையும், பொன்மேரு கிரியும் உயிர்களும், ஐம்பெரும் பூதங்களுமாகி, அவற்றின் முதற் பொருளாக விளங்கும் பார்வதியம்மை வளர்த்த குமாரக்கடவுளே, நடுக்கங்கொண்ட சூரபன்மனுடைய உடம்பு அழியும்படி வேலை விடுத்தருளிய இளம்பூரணரே, உக்கிரமும் வெப்பமுமான கண்களுமுடைய மயிலின்மீது வரும் பெருவாழ்வே... கொடுமுடியாகி வளர்ந்து

***நல்லவர்கள் வல்லவர்களாக இருந்தால்த்தான் காரியமும் நிகழும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகந்தங்கும் இடமாகியுயர்ந்த சுவாமிமலைமீது அமர்ந்துள்ள பெருமிதம் உடையவரே. நிலாவொளியிலிருந்து விதவிதமான மலர்களைத் தெரிந்து எடுத்து நிறைந்த கூந்தலில் சூட்டி காதுவரை நீண்டுள்ள ஒப்பற்ற வேல் போன்ற கண்களில் ரேகைகள் விளங்க, நினைவு இன்றி சொற்களைக்கூறி, காமநூலில் கூறியபடி மனோகரமான கணக்கற்ற செயல்களைச் செய்து கனிவாய் ஊறலுண்டு அதிக ஆசையுடன் கலவி புரிந்து மாதர்களிடம் மயங்கும் கபடனாகிய அடியேனைத் தேவரீர் ஆட்கொள்ளத் திருவருள் புரிவீராக.

*விரிவுரை:*

**நிலவினிலேயிருந்து-**

எல்லாவுயிர்கட்கும் இன்பத்தைத் தருவது தேன்போல் விளங்கும் வான்நிலா. நிலா முற்றத்தில் அன்பர்களுடன் இருந்து உண்பதும் உரையாடுவதும் பெருமகிழ்ச்சியைத் தரும்.

**வகை மலரே தெரிந்து நிறை குழல் மீதணிந்து-**

காமுகர் தாம் விரும்பிய பெண்களின் கூந்தலில் விதவிதமான மலர்களைத் தேர்ந்து வண்ண மலர்களை அழகுறப் பிணைந்து சூட்டி மகிழ்வார்கள்.

**குழை தாவும் நிகரறு வேவினங்கள் வரிதா-**

பெண்களின் கண்கள் நீண்டிருப்பது உயர்ந்த இலக்கணம். அது காதுவரை நீண்டு குழைமீது தாவுவதுபோல் இருக்குமாம்.

"செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு" என்று சேக்கிழார் பெருமானும் கூறுவார்.

வேலினங்கள் என்றது உவம ஆகுபெயராகக் கண்களைக் குறிக்கின்றது. வேலைப் போன்ற கூரிய கண்கள். வேலானது பகைவரை வெட்டித் துணிப்பதுபோல் கண்களும் இளைஞரது உள்ளத்தை வெட்டிப் பிளக்கவல்லது.

**வாசகங்கள் நினைவறவே மொழித்து-**

மாதர் பால் மயக்கமுற்றோர் என்ன சொல்கிறோம் என்ற நினைவு சிறிதுமின்றிப் பேசுவர்.

**கபடனை யாள வுன்றன் அருள் கூர்வாய்-**

கபடன்- வஞ்சகன். முருகா... வஞ்சகனாகிய என்னை ஆட்கொள்ளத் திருவருள் புரிவாய்.

**உலகமொரேழும்... ஒரு முதலாகி நின்ற உமை-**

இந்த இரண்டு அடிகளால் உமாதேவியின் வியாபகத்தை உரைத்தருளினார். அம்பிகை எல்லாமாய் எங்கும் நிறைந்திருக்கின்றனர். எல்லாம் சக்தி மயம்.

*தற்காலிகத் தேவைகளை ஒத்திப்போட்டால் நீண்டகாலத் தேவைகளை அடையலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடுமுடியாய் வளர்ந்து-**

சுவாமிமலையானது கயிலைமலையின் கொடு முடிகளில் ஒன்று என்று அத் தலபுராணம் கூறுகின்றது.

***கருத்துரை:***

உமாசுத, மயில்வாகன, மாதர் மயக்கற அருள்புரிவாய்.

***தொகுப்பாக்கத்திற்கான குறிப்புரை:***

அண்மைக் காலமாக இந்தத் திருப்புகழ் பாடல் இணையத்தளங்களில் அதிகம் பரப்பப்பட்டு வருகின்றது. இத் திருப்புகழைப் பலரும் தமது குரலில் பாடி வருகின்ற போதிலும் தமிழகத்தைச் சேர்ந்த கரிகரன் சூரிய நாராயணன் என்கிற பத்து வயதுச் சிறுவன் தனது செவ்விளங்குரலில் அற்புதமாகப் பாடி வருகின்றார். அத்துடன் தற்போதைய காலச் சூழலுக்கமைவாக இளம்சமுதாயத்தினர் இத்திருப்புகழின் உள்ளார்ந்த கருத்துக்களை உய்த்தறிந்து தத்தமது பாதைகளை சீராக அமைத்துக்கொள்வார்களாயின் வீணான சலனங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

அடுத்த திருப்புகழ்த் தொடரில் - வடமலை முருகப்பெருமான்மீது பாடப்பெற்ற திருப்புகழும் அதற்குரிய விளக்க உரைகளுமாக அமையும். (தொடரும்...

## உள்ளம் போலவே இந்த உலகம்

போரில் பெற்ற வெற்றியால் மன்னனுக்கு ஆணவம் அதிகரித்தது. அதன் முடிவாகப் பிறரை அவமானப்படுத்தி பேசுவதில் மகிழ்ச்சி கொண்டான்.

ஒருநாள் வயதான துறவி அரண்மனைக்கு வந்தார். அவரது நடையைக் கண்ட மன்னன் "என்ன துறவியாரே எருமை மாடுபோல அசைந்தாடி வருகிறீரே" என சொல்லி சிரித்தான்.

துறவி சற்றும் கலங்கவில்லை. மாறாக மன்னனைக் கண்டு புன்னகைத்தபடி "மன்னா! நான் வணங்கும் புத்தர்போல தாங்கள் காட்சியளிக்கிறீர்கள்" எனப் புகழ்ந்தார். இகழ்ந்தாலும் பிறர்மீது கோபம் கொள்ளாத துறவியைக் கண்ட மன்னனுக்கு வியப்பு எழுந்தது.

"எருமை என நான் இகழ்ந்தும் என்னை புத்தர் எனப் புகழுகிறீரே ஏன்?" எனக் கேட்டான்.

"மன்னவா, உள்ளம் போலவே இந்த உலகம் காட்சியளிக்கும் என்பர். என் உள்ளத்தில் புத்தர் பெருமான் இருப்பதால் எங்கும் புத்தர்மயமாக தென்படுகிறது. அதைப் போல் தாங்களும் சிந்தித்தால் உண்மை புரியும். உலகில் யாரும் உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ இல்லை. எல்லாம் சரிசமமானவரே" என்றார் துறவி.

துறவியின் பேச்சில் உண்மை இருப்பதை உணர்ந்த மன்னன் அக்கணமே ஆணவத்தைக் கைவிட்டான்.

***அசட்டுத் துணிச்சல் அவலத்தையே தரும். அறிவாராய்ந்த துணிவு வெற்றிகளைக் குவிக்கும்.***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்கள் தரும் பதிவுகள்



மன்னார் - பெரியமடு, காயாநகர் கிராமத்தில் வாழ்வாதார உதவியாக விவசாய செய்கைக்காக இரு குடும்பங்கள் பயன்படுத்துவதற்காக 100,000. 00 ரூபா நிதிச் செலவில் ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

மன்னார் - மடு, பெரியமுறிப்பு கிராமத்தில் இதய நோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவ செலவுக்காக 25,000. 00 ரூபா நிதியும் அத்தியாவசியமான உலர் உணவுப் பொதியும் வழங்கப்பட்டது.





மன்னார் - வட்டக்கண்டல், குருவில் கிராமத்தில் முன்னால் போராளியான புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவ செலவுக்காக 25,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

**விருப்பத்துடன் உழைத்தலே உயர் வாழ்வுக்கு அடித்தளம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையின் கோரிக்கைக்கு அமைவாக தொல்லியல் ஆய்வுக்காக 25,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

யா/ வலி. தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக பரிசளிப்பு நிகழ்வுக்காக 40,000. 00 ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டன.




சூழ்நிலைகளை எதிர்த்துப் போராடுவதே வாழ்க்கையின் வளர்ச்சிக்கு உத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானை பிரதேச வைத்திய சாலையின் கோரிக்கைக்கு அமைவாக நரம்பியல் புனருத் தாபன பிரிவுக்குரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு பங்குனி மாத வேதனம் வழங்குவதற்கு ரூபா 70,000. 00 ரூபா வழங்கப் பட்டது.





தம்பாலை, பொன்னம்பலவாணர் சித்தி விநாயகர் ஆலய கட்டிடப் பணிக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் பங்குனி மாத சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்



காலத்தை அளந்து செலவழிப்போரே பணத்தை எண்ணி வாங்கும் உரிமையுடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் பங்குனி மாத சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்




பொறுப்பை ஏற்கத் தயங்குகிறவர்கள் யாதொரு பணிக்கும் பயன்படமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த இளந்துளிர் அமையத்தின் சித்திரைவருட நிகழ்வுக் காக 30,000. 00 ரூபா நிதி வழங்கப் பட்டது.



இந்தியா - தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் தமிழக ஆளுநரிட மிருந்து தமிழ்நாடு இலக்கிய ஆளுமை விருதினைப் பெற்ற கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி திரு ச. லலீசன் அவர்களை ஆச்சிரம சுவாமிகள் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவித்தார்கள்.

*சமூக நலனுக்காகத் தன்னை அழித்துக்கொள்கிறவர்கள் பாக்கியவான்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

– இணையத்திலிருந்து –

அன்பே தெய்வம் என்பது இவ்வுலகில் மத வேறுபாடின்றி அனைவரும் ஏற்றுக்கொண்ட ஓர் உண்மையாகும். அன்பு என்பது என்ன? அது எவ்வாறு நமக்கு அருள் அளிக்கிறது என்பதை ஆராய்ந்தால் ஓர் உண்மை புலப்படுகிறது. அன்பு என்பது நமக்கு தொடர்புடையவர்களிடம் நாம் காட்டும் மன நெகிழ்ச்சியாகும். நம் உறவினர், நண்பர்கள், மற்றுமுள்ள ஏனையவர்களிடம் நாம் கொள்வது அன்பாகும். இவ்வன்பு தம்மோடு யாதொரு தொடர்பும் இல்லாத அயலாரிடமும், ஜீவ ஜந்துக்களிடமும் காட்டும்போது அருளாக மாறுகின்றது. அருள் என்பது அன்பிலிருந்தே பிறக்கின்றது என்பதையே, அருள் என்னும் அன்பின் குழவி என்கிறார் பொய்யாமொழியார். எனவே அன்புடன் இருப்போம் என்கிற உறுதிமொழியை நாம் அனைவரும் எடுத்துக்கொண்டால் குடும்பத்திலும், நாட்டிலும் நல்வாழ்வு தலையெடுக்கும் என்பது திண்ணம். பொறுமையும் சாந்தமும் எங்கும் நிறைந்திருக்கும்.

அன்பே தன்னல மறுப்பையும், பிறர்நல விருப்பையும் தரவல்லது என்பதையே,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்றும் உரியர் பிறர்க்கு

என்ற குறள்மூலம் நன்கு விளங்கும். பிறரிடம் தயையுடன் இருப்பதை செய்முறையில் காட்டுவதே அன்பின் வெளிப்பாடு. இதற்கு நம் சொல், செயல், பொருள் மற்றும் அறிவு ஆகியவற்றை மற்றவர்க்கு உபகாரம் ஆகும்படி அளித்து (பரோபகாரம் இதம் சரீரம்) அவர்களுடைய கஷ்ட நஷ்ட காலங்களில் பயன்படச் செய்வதேயாகும். இச் செயல் நமக்கு இம்மையிலும், மறுமையிலும் பேரானந்தப் பெருவாழ்வைத் தரும் என்பது திண்ணம். மனித உடல் எடுத்த வாழ்வின் பிரயோசனமே அன்புடன் வாழ்வதேயாகும். இதையே,

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

என வள்ளுவர் உரைக்கின்றார். அன்பு அழியாதது. அந்த அன்பின் வடிவே ஆண்டவன். இறைவனிடத்தில் இருக்கின்ற அன்பின் ஒரு பகுதி நம்மிடம் நிலைத்துவிட்டால் உறவினர், நண்பர்கள் மற்றும் பிராணிகளிடமிருந்து ஏற்படும் தவறுகளினாலும் வெறுப்பு அடையாமல் செய்துவிடுகிறது. இந்த அன்பு உலகெங்கும் நிறைந்து வழிவதுதான் உலக மக்கள் மனிதத் தன்மையைப் பெற்றதன் பயனாகும். இந்த அன்பு வளர்வதற்கு முதன் முதலில் நாம் செய்யவேண்டிய சிறிய தியாகம் (கொஞ்சமாக) நமக்கு வரும் கோபங்களையும் முரட்டு பிடிவாதங்களையும் விடப் பழகுதல், சகிப்புத் தன்மையை வரவழைத்துக் கொள்ளுதல், தேவைக்கு மேல் பொருள்களை விரும்பாதிருத்தல், பொய் பேசாது இருத்தல், கடவுளிடம் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்தல், பெரியோரிடம் மரியாதையும், யாரையும் எதிர்த்து சவால்விட்டு பேசாதிருத்தல், உடல் வளர்ச்சியை மட்டும் எண்ணாமல் உயிரின் மேன்மையை அறிய தியானத்தில் ஈடுபடுதல், தேவையின்றி பேசாதிருத்தல் போன்ற குணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கொள்ளுதலே ஆகும். "அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே" என்று வள்ளலாரின் அருட்பாவும், அன்பு வடிவான இறைவனை தன் மனத்தின் இருத்தி மனம் உருகி, கண்ணீர் மல்கியதன் வெளிப்பாடே மாணிக்கவாசகரின் திருவாசகமும் ஆகும். அன்பும் அறமும் இணைந்து ஓரிடத்தில் செயற்பட்டால் அங்கு நல்ல பண்பும் பயனும் ஏற்படுகின்றது என்பதை,

அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

என்ற திருக்குறள் நன்கு விளக்கும். அன்பு, வீடுபேற்றை அளிக்கின்றது. அன்பானது ஆண்டவனை இறங்க வைக்கிறது. நமக்கு அருள் அளிக்கிறது. குகன் ராமபிரான்மீது செலுத்திய அன்பால் அதிகம் மகிழ்ந்த இராமன் குகனுடன் சேர்ந்து ஐவராவோம் என தன் சகோதரர்களில் ஒருவனாகவே சேர்த்துக்கொள்கிறார். அவதார புருஷனாகிய இராமபிரான் வேடுவன் குகனைச் சகோதரனாக ஏற்றுக்கொண்டது அன்பினால் என்பதை கம்பராமாயணம் நமக்கு தெளிவுபடுத்துகின்றது.

ஆஞ்சநேயர் இராமனிடம் கொண்ட அன்பால் செய்த பணிவிடைகளால், உயர்ந்த பக்தர்களால் துதிக்கத்தக்கவராகத் திகழ்கிறார்.

ஈசனிடம் கொண்ட அன்பின் மிகுதியால் தன் கண்ணைப் பிடுங்கி அப்பி கண்ணப்ப நாயனாராகத் திகழும் அன்பின் பெருமை பெரியபுராணம் நமக்கு உரைக்கின்றது.

மேற்கூறியவர்களின் அன்புக்கு ஆண்டவன் மெச்சி அவர்கள் வீடுபேற்றைப் பெற்றதை அறநூல்கள் நமக்குக் கூறுகின்றன. அன்புள்ளம் உடையவரின் உடம்பே உயிர் தங்கியுள்ள உடம்பாகும். அன்பில்லாதவர் உடலில் உயிர் இருந்தும் அவ் உடம்பு எலும்பு முதலியவற்றால் ஆகிய தோல் போர்த்தப்பட்ட வெறும் உயிரற்ற உடம்பே ஆகும் எனக் கூறும்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

எனும் குறளின் பொருளுணர்ந்து சான்றோர்களின் சிந்தனையைத் துணைக்கொண்டு அன்புடன் வாழ்ந்து உய்வோமாக.

---

## பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டும்.

பிரார்த்தனை அல்லது வேண்டுதல் என்பது இறைவனுடன் நாம் தொடர்பு கொள்வதற்கான மகத்தான சாதனம். பிரார்த்தனைமூலம் இறைவனுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவரது ஆற்றலையும் ஒளியையும் கருணையையும் பெறமுடியும் என்பது சுவாமி விவேகானந்தரின் ஆழமான கருத்து. பசியால் அழும் குழந்தை தாயிடம் பால் கேட்கும். ஆனால் ஞானப்பசி வராத நாம் யாரிடம் பிரார்த்தனை செய்வது?

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார் கடவுளிடமும், அவரது தூதர்களிடமும், உலகைக் காக்கவந்த மகான்களிடமும், ஆன்மாவிடமும் உதவிகோரிப் பிரார்த்தனை செய்யுங்கள். இறைவனிடம் சுவாமி, கௌரிமணாளா, ஓ உலக நாயகியயே, எனக்கு ஆண்மையைக் கொடு; அம்மா, எனது பலவீனத்தைப் போக்கு; என் கோழைத்தனத்தைப் போக்கு; என்னை மனிதனாக்கு என்று வேண்டுகிறார். இறைவனிடம் என்ன வேண்டிப் பிரார்த்திக்கலாம்?

*அளவில்லாத வேதனைகளை தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் ஒரு பொதுப் பிரார்த்தனையை வடிவமைத்துக் கொடுத்துள்ளது. எல்லோரும் ஆனந்தமாக இருக்கட்டும். அனைவரும் நோயிலிருந்து விடுபடட்டும்; மங்களம் உண்டாகட்டும். எவருக்கும் எந்தவிதத் துக்கமோ, கஷ்டமோ உண்டாகாமல் இருக்கட்டும். இறைவா என்னை உண்மை அல்லாதவற்றிலிருந்து உண்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், மரணத்திலிருந்து மரணமிலாப் பெருவாழ்வுக்கும் இட்டுச் செல்லுங்கள் என்று பிருஹதாரண்ய உபநிஷதமும் கூறுகிறது. இறைவனிடம் உயர்ந்த பொருளையே கேட்டுப் பெறவேண்டும். புலன்களைக் கவரும் அற்ப பொருளையா கேட்பது? அற்பமான பலவித ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கீழ்நிலைக்கு இறங்கி முட்டாள்தனமாகப் பிரார்த்தனை செய்யக்கூடாது என்கிறார் சுவாமிஜி. இவ்வாறு கூறும் சுவாமிஜி, ஒருவன் கடவுளிடம் இதைத் தா, அதைத் தா என்று கேட்பது எப்படி உண்மையான அன்பாகும் என வினவுகிறார். நான் உன்னிடம் வேண்டுகிறேன். அதற்குப் பதிலாக இவற்றைத் தா என்று கேட்பது கடைக்காரனிடம் வியாபாரம் செய்வதேயன்றி வேறென்ன? என்றும் சாடுகிறார்.

உண்மையான பக்தர்களின் வேண்டுதல் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இறைவா! என்னிடம் எதுவுமில்லை. எனவே எனது இந்த உடலையும் மனதையும் உன் காலடியில் சமர்ப்பிக்கிறேன். என்னைக் கைவிட்டுவிடாதே பிரபோ என்று பக்தன் தன் இதய ஆழத்திலிருந்து பிரார்த்தனை செய்யவேண்டும் என்கிறார். அதே சமயம் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். எனக்கு உடல் நலத்தைத் தா, பொருள் வளத்தைத் தா என்று பிரார்த்திப்பது பக்தியல்ல. அது வெறும் கருமம் அல்லது உயரிய சடங்கு என்றும் கண்டிக்கிறார். பிரார்த்தனைகளின் பல்வேறு நிலைகள் என்னென்ன?

இறைவனைப் போற்றுவதும், பிரார்த்திப்பதும் நமது வளர்ச்சிக்கு வழிகள். பிரார்த்திப்பதற்கு வார்த்தைகள் தேவையில்லை. மௌனமே நலம். வடிவமைக்கப்பட்ட சொற்களால் பிரார்த்தனை செய்வதென்பது செயற்கையாக அமையும். தியானமும் ஒருவகைப் பிரார்த்தனைதான். பிரார்த்திப்பதும் தியானத்திற்குச் சமம்தான். பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் தியானத்தின் ஆரம்பநிலைகள்.

பிரார்த்தனைகளும் தல யாத்திரைகளும் நமது உள்ளத்தைச் சுத்திகரிக்கும் சாதனங்கள். நீங்கள் உயரிய நிலையை அடையும்போது உங்களது மூச்சுகூடப் பிரார்த்தனையே. நமது எல்லா எண்ணங்களும், பிரார்த்தனைகளும் நமது மிருக சக்தியின் ஒரு பகுதியை தேஜஸ் சக்தியாக மாற்றி, நமக்கு ஆன்மீக சக்தியை அளித்து உதவுகின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அறிவுரைப்படி, தன் குடும்பத்து வறுமையை விலக்கும்படி காளி தேவியிடம் கேட்க வேண்டும் என எண்ணிக்கொண்டு மூன்றுமுறை போனபோதும் முடிவில் என்ன கேட்டார் தெரியுமா? அம்மா எனக்கு வேறெதுவும் வேண்டாம். ஞானத்தையும் பக்தியையும் மட்டும் தந்தருளவேண்டும் எனக் கேட்டார். துறவின் உயர்நிலையில் திளைத்த சுவாமிஜியின் பிரார்த்தனை என்னவாக இருந்திருக்கும். அவரே சொல்கிறார் உலக நன்மைக்காக போராடிக்கொண்டிருக்கும்போதே ஒரு வீரனைப்போல் நான் உயிர்விட வேண்டும். எப்போதும் எவ்விடத்தும் உங்களை இறைவன் ஆசீர்வதிக்கட்டும். அறியாமையில் மூழ்கித் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் லட்சக்கணக்கான மக்களுக்காக உங்கள் இதயங்கள் இரங்கித் துடிக்குமாறு இறைவன் அருளவேண்டும் என்பதே இந்தப் பிரார்த்தனை.

*அறிவைவிட தைரியத்தினால் பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

**02.05.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு:- "ஈழத்தில் சைவம்"**

**வழங்குபவர் :- திரு ஜெ. கோபிராஜ் அவர்கள்**

[பொது சுகாதார பரிசோதகர்]

---

**09.05.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு:- "திருப்பெரு வடிவம்"**

**வழங்குபவர் :- திரு எஸ்.ரி. குமரன் அவர்கள்**

[சைவப்புலவர்]

---

**16.05.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**"இன்னிசை"**

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**23.05.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு:- "மகாபாரதம்" (தொடர்)**

**வழங்குபவர் :- திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்**

[ஆசிரியர்]

---

**30.05.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் வைகாசி மாத வெளியீடு

**329 ஆவது மலர்**

**வெளியீட்டுரை:- திரு செ. ஞானசபேசன் அவர்கள்**

[இளைப்பாறிய கிராம சேவகர்]

**மதிப்பீட்டுரை:- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்**

[ஆசிரியர் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org